
வெளியீடு 11.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருக்கோகரணம் திருப்பயண மலர்.



திருக்கோகரண திருக்கோயில்.

துன்முகி ஆண்டு—தைத்திங்கள்.

1957.

அருள்நெறித் திருக்கூட்டம், ஈரோடு.

கௌரி பிரஸ், ஈரோடு,

ஈரோடு அருள்நெறித் திருக்கூட்ட வெளியீடு—11.

உ

அன்பே சிவம்.

திருச்சிற்றம்பலம்.

திருக்கோகரணம் திருப்பயண மலர்.

திருப்பயணத்தில் கலந்துகொண்ட அன்பர்களின் வேண்டுகோளின்படி
ரா. ப. தங்கவேலு அவர்களால்
எழுதிப் பதிப்பிக்கப்பட்டது.

துன்முகி—தை] 1957 [விலை 0—4—0

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

முன்னுரை.

திருக்கோகரணம் துளுவ நாட்டிலுள்ள அரிய திருப்பதி. இது, வட கன்னடம் வட்டத்தில் மேற்குக் கடற்கரையோரத்தில், குன்றுகள் சூழ்ந்து, சோலைகள் அடர்ந்து வளர்ந்துள்ள அருமைத் திருத்தலம். திருஞானசம்பந்தப் பெருமானும், திருநாவுக்கரசரும் இப்புண்ணியப் பதிக்கு இரு தேவாரப் பாமாலை பாடியருளி உள்ளார்கள். இலங்காதிபனாகிய இராவணன் திருக்கயிலையில் பரமனிடம் சிவலிங்கத்தைப் பெற்று இலங்கை செல்லும் வழியில் விநாயகப் பெருமான் தடுத்து இங்கு இவ்வரிய மூர்த்தியை எழுந்தருளச் செய்தார் என்று தல புராணம் கூறுகின்றது.

இப்புண்ணிய மூர்த்தியை எங்கள் குலம் செய்த தவத்தால் வலஞ் செய்து வணங்கும் பேற்றை துன்முகி ஆண்டு, தைத்திங்கள் 4-ஆம் நாள் (15—2—57) பெற்றோம். "நான்பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்னும் ஆன்றோர் பொன்னுரைக்கேற்ப, மற்றைய அன்பர்களும் திருக்கோகரண நாதனைச் சென்று வழிபட்டுய்ய ஒரு சிறு தூண்டு கோலாக இருக்குமென்று எண்ணி, ஈரோடு அருள்நெறித் திருக்கூட்டத்தின் வெளியீடாக இச்சிறு நூல் வெளியிடப்படுகின்றது. அன்பர்கள் பெற்றுப் பயன்பெற வேண்டுகின்றேன்.


"கால்களால் பயனென்? கறைக் கண்டனுறை கோயில்
கோலக் கோபுர கோகரணம் சூழாக் கால்களால் பயனென்?"

கோகரண நாதன் குரைகழல் வாழ்க.

இங்ஙனம்,

ஈரோடு, 17—4—57

ஆசிரியர். ரா. ப. தங்கவேலு,
அருள் நெறித்திருக்கூட்டம், ஈரோடு.



திருக்கோகரணப் பிள்ளையார்.

அன்பே சிவம்

திருக்கோகரணம்.

கையாற் கயிலை எடுத்தான் தன்னைக்
கால் விரலால் தோள் நெரிய ஊன்றினான்காண்
மெய்யின் நரம்பிசையால் கேட்பித்தாற்கு
மீண்டே யவற்கருள்கள் நல்கினான்காண்
பொய்யர் மனத்துப் புறம்பாவான் காண்
போர்படையான் காண் பொருவாரில்லாதான் காண்
மைகொண் மணிமிடற்று வார்சடையான் காண்
மாகடல் சூழ் **கோகரணம்** மன்னினானே.

திருச்சிற்றம்பலம்.

அன்புடையீர் !

மூர்த்திதலந் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொல்ல சற்குருவும் வாய்க்கும் பராபரமே.

என்ற, தாயுமானப் பெருந்தகையின் பொன் மொழியைத் தலைக் கொண்டு கடந்த 15 ஆண்டுகளாக தமிழ் நாட்டிலுள்ள 269 திருப் பாடல்கள் பெற்ற பதிகள் தோறும் சென்று திருக்கூட்டம் வழிபட்டு அங்காங்கே அருள்நெறியைப் பரப்பி வந்தனர்.

தமிழ் நாட்டிற்கு வட மேற்கில் உள்ள திருக்கோகரணத்தை சென்று வழிபட உள்ளத்தில் ஆர்வம் சதா உந்திவந்தது. இப் புண்ணியப் பதியை அரிதில் சென்று வழிபட்ட அப்பமூர்த்திகள்

"கால்களாற் பயனென்? கறைக் கண்டனுறை கோயில் கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக் கால்களால் பயன் என்?"

என்று பாடி அருளிய திருவங்கமாலையை ஓதுந்தோறும் உள்ளத்தில் உணர்வு பொங்கும். ஆக்கை நிலையாமையையும் கோகரண நாதனின் பெருமையை எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும், நெஞ்சில் என்று சென்று வழிபடுவோம் என்ற ஏக்கம் பிறக்கும். பன்னாள் எண்ணம் கைகூட திருவருள் துணை கொண்டு 43 அன்பர்களுடன்

திருக்கோகரணத்திருப் பயணம் **10—2—57** ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்கு கோட்டை ஈரோடை அப்பர் சிவாலயத்தினின்றும் கோளறு பதிக பாராயணத்துடன் திருக்கூட்டத்தலைவர் திரு. சு. இராமசாமி செட்டியார் அவர்கள் தலைமையில் தொடங்கிற்று. அன்பர்கள் K. கந்தசாமி செட்டியார், M. இரத்தினகிரி செட்டியார், சி. ஆறுமுக முதலியார். R. வெங்கடாசல முதலியார், S. பழனிச்சாமி செட்டியார் இன்னும் பல நெருங்கிய அன்பர்கள் புகைவண்டி நிலையத்திற்கு வந்திருந்து பழவடியார் திருக்கூட்டத்தை, ஒரு பழக்கூடை நிறையப் பழங்களுடன் கொடுத்து அன்புடன் வழியனுப்பினர். எனது நண்பர் K. கந்தசாமி செட்டியார் அவர்கள் இப்பயணத்தில் கலந்துகொள்ள பேரார்வம் கொண்டிருந்தும் சூழ்நிலை இடங்கொடுக்காதபடியால் உடன் வர இயலாதவகையில் கண் கலங்கும் நிலையில் வழியனுப்பிக்கொடுத்தார்கள்.

திருப்பயணத்தில் கலந்து கொண்ட 43 அன்பர்களில் 26 பேர் தாய்மார்கள். ஈரோட்டிலிருந்து மங்களூருக்கு பயணச்சிட்டுகள் வாங்கி இருந்தோம். இரவு 12-மணி சுமாருக்கு சொரனூரில் வேறு வண்டி மாறி ஏற வேண்டும். அகால நேரத்தில் பெண்களை இறக்கி ஏற்ற வேண்டுமே என்ற கலக்கத்தில் புகை வண்டியை நோக்கி நின்று கொண்டிருந்தோம். இந்த வண்டிக்குக் கூட்டமும் நிறைய நின்றிருந்தது. வண்டித்தொடரும் வந்தது. இத்திருப்பயணத்திற்கு திருவருள் துணை நிற்பதை காட்டுவான் போன்று, வண்டித்தொடரில் நேராக மங்களூர் செல்லும் மக்கள் ஏறும் வண்டி எங்கள் கூட்டம் நிற்கும் இடத்திற்கு நேராக வந்து நின்றது. இறைவன் திருவருளை வியந்து அப்புகைவண்டிப் பெட்டியில் யாவரும் ஏறிக்கொண்டோம். இதனல் இடையில் இறங்கி ஏறவேண்டிய கவலை நீங்கிற்று.

வண்டித் தொடரும் புறப்பட்டு விஜயமங்கலம் நிலையத்தில் நின்றது. இங்கு அன்பர் நாச்சிமுத்து முதலியார் அவர்கள் வழிபாட்டுப் பொருள்களுடன் நிலையத்தில் நின்றிருந்தார்கள். இவர்கள் சிவனடியார்களை சிவமாகவே வழிபடும் சிலமிக்கவர்கள். இவர்களைக் கண்டதுமே வண்டியைவிட்டுச் சிலர் இறங்கி நின்றோம். அன்பர் அவர்கள், புகைவண்டி நிலையம் என்று நாங்கள் தடுத்தும் கேளாமல், திருக்கூட்டத்திவருக்கு பாதங்களுக்கு நீர் வார்த்து, மாலை சூட்டி, மலர்

தூவி, கற்பூரம் காட்டி திருக்கூட்டத்தை வழிபட்டு திருமுறைகள் ஓதி வணங்கினர். இதற்காக வண்டியும் 5 நிமிடம் தாமதித்துப் புறப் பட்டது. அன்பர்கள் "அர, அர" முழக்கத்துடன் வண்டி மீண்டும் புறப்பட்டது. அன்பர் வழியனுப்பிய காட்சி உள்ளத்தை உருக்கும் தன்மையவாயிருந்தது ஒரு அன்பரின் அன்புச் செயலுக்குப் புகை வண்டித்தொடர் தாமதித்துப் புறப்பட்டதென்றால் சிவநேயச் செல்வர் களுக்குக் கைகூடாத செயல்கள் தான் யாவை!

இரவு சுமார் 7 மணிக்கு வண்டித்தொடர் திருப்பூர் வந்து சேர்ந்தது. திருப்பூர் அருள் நெறி வார வழிபாட்டுக் கழக அன்பர்கள் பலர் புடை சூழ, அன்பர் A. C. பழனியப்ப செட்டியார் அவர்கள் நின்றிருந்தார்கள். இந்த வழியனுப்புக் கூட்டத்தில் பல தாய்மார்கள் கூடி நின்றது குறிப்பிடத்தக்கது. திருகூட்டத்திற்கு மலர் மாலைகளை சூட்டி, திருப்பயணம் இனிது முற்றுப்பெற இறைவனை வாழ்த்தி வழி யனுப்பிக்கொடுத்தனர். இங்கு திரு A. சாமிநாத முதலியார் அவர்கள் இரு பெண்களுடன் பயணத்தில் கலந்து கொண்டனர். இப் பொழுது எங்கள் கூட்டம் 46 ஆயிற்று.

11—2—57 திங்கள்கிழமை

இன்று காலை 10 மணி சுமாருக்கு மங்களூரென்னும் மங்களாபுரம் வந்து சேர்ந்தோம். இங்கு, திருப்பூரிலிருந்து வியாபாரத்தின் பொருட்டு வந்து அறுவை வாணிபம் இயற்றிவரும் பன்னிரண்டாஞ் செட்டிமார் என்று கூறப்படும், அறநெறிச் செல்வப் பெருமக்கள் பலர், அன்பர் திரு. M. இராஜலிங்கம் செட்டியார் அவர்கள் தலைமையில் நிலையத்தில் அன்புடன் எங்கள் திருக்கூட்டத்தை வரவேற்று அழைத்துச்சென்று கிருஷ்ணு விலாஸ் என்ற உணவுச்சாலையில் தங்க வைத்தார்கள். குளித்து வழிபாடுகளை முடித்துக்கொண்டு நண்பகல் உணவு உண்டு ஓய்வு எடுத்துக்கொண்டோம். இந்த உணவுச்சாலை எல்லாவித வசதி களையும் உடையது.

மங்களூர்.

மாலை, மங்களாம்பிகையை வழிபட மங்களாம்பிகையின் திருக் கோயிலுக்குச் சென்றோம். இந்நகரும் இந்த அம்பிகையின் திருப் பெயராலேயே மங்களாபுரம் என்று வழங்கி வந்தது. ஆங்கிலேயர்

காலத்தில் இப்பெயர் திரிந்து மங்களூர் என்று மாறிற்று. மங்களாம்பிகையை திருப்பயணத்தில் முதன் முதலில் வழிபட்டோம். பிறகு இராம கிருஷ்ணர் மடாலயத்திற்குச் சென்றோம். இங்கு ஒரு இலவச வைத்தியசாலையும், மாணவ உணவு விடுதியும் இவர்களால் நடத்தப்பட்டு வருகின்றது. இம்மடத்தின் அதிபர் எங்களுக்கு அருளுரை வழங்கினர். இவ்வன்பர் தமிழராயிருப்பினும் கன்னட மொழி பேசும் மக்களிடையே மிகுதியும் பயின்று வந்தபடியால் தாய் மொழியாகிய தமிழ் மொழியில் பேச இயலாமல் கன்னட மொழியில் பேசினர். அதை அன்பர் வேலூர் R. இராஜலிங்கம் செட்டியார் அவர்கள் தமிழில் மொழி பெயர்த்துக் கூறினர். வேற்றுமொழிச் சூழல் மிகும்பொழுது தாய் மொழியையும் மறப்பிக்கும் என்பதை இதனுல் அறிந்தோம். இரவு எங்கள் தங்குமிடம் வந்து சேர்ந்தோம். உடம்போ அசதி, இடமோ வசதி. ஆகையால் இரவு நன்கு கண் அயர்ந்தோம்.

12—2—57 செவ்வாய்கிழமை.

அதிகாலே 5-மணிக்கு அன்பர்கள் திருப்பள்ளி எழுச்சிபாட, கண் விழித்தோம். மங்களூருக்குச் சுமார் 3 மைல் தூரத்திலுள்ள கதிரி என்னும் தலத்திற்கு வந்து சேர்ந்தோம். இது இயற்கை அழகு கொழிக்கும் பொழில் சூழ்ந்த இடம். "வடக்கே விஸ்வநாதன், தெற்கே மஞ்சுநாதனென்று," இங்குள்ள சிவபெருமானை அன்பர்கள் வழிபடுகின்றனர். இது ஒரு அழகிய சிவாலயம், அன்பர்களுக்கு மஞ்சுபோல் (மஞ்சு=மேகம்) பயன் கருதாது அருள் வழங்குபவன் ஆகையால் அன்பர்கள் இங்கு அண்ணலே மஞ்சுநாதனென்று அழைக்கின்றர். இவ்வழகிய திருக்கோயிலின் புறமதிலேச் சேர்ந்தார் போல் ஒன்பது தொட்டிகளில் அருவி நீர் நிறைந்துள்ளது. இப்புனித நீரில் யாவரும் நீராடினேம். இங்கு ஓரிடத்தில் விநாயகப்பெருமானின் கீழுள்ள ஒரு நந்தி வாயினின்றும் அருவி நீர் விழுகின்றது. இதிலும் அன்பர்கள் நீராடினர் இப்புனித நீர் நிலேகளே அசுத்தப்படுத்தா வண்ணம் காத்து வருகின்றனர். மஞ்சுநாதனே வழிபட்ட பின்னர், மங்களூர் வந்து, வல்லபை விநாயகர் திருக்கோயில், வெங்கட்டரமணர் திருக்கோயில் ஆகிய இரண்டிலும் வழிபாடு செய்தோம். நண்பகலுணவுண்ட பிறகு, உடுப்பிக்குப் புறப்பட்டோம். மங்களூரிலிருந்து உடுப்பி செல்ல இரண்டு உந்து வண்டிகளுக்கு முதல் நாளே பயணச்சீட்டு

வாங்கி வைத்திருந்தோம். மங்களூரில் தங்கியிருந்த இரண்டு நாட்களும் எங்களை வரவேற்ற அன்பர்கள், தலைத்தீபாவளிக்கு மாமனார் வீட்டுக்கு வந்த, மருமகப்பிள்ளையை உபசரிப்பதைப்போல் உபசரித்து வழியனுப்பினர். இங்கு திருக்கூட்டத்திற்கு உணவு, உறையுள் முதலியசெலவுகள் யாவையும் இந்த அன்பர்களே ஏற்றுக்கொண்டனர். அன்பர் M. ராஜலிங்கம் செட்டியார் அவர்களும், அவருடன் உடனின்று பணியாற்றிய மற்ற அன்பர்களும் எங்களிடம் காட்டிய அன்பு போற்றுதற்குரியது.

உடுப்பி.

இந்நகருக்கு மாலை 5-மணிக்கு வந்து சேர்ந்தோம். இந்நகருக்குச் சரியான பெயர் உடுபதி என்பது. உடு=விண்மீன், பதி=தலைவன். உடுபதியாகிய சந்திரன் இங்குள்ள சிவபெருமானை வழிபட்டு தன் பழியைப் போக்கிக்கொண்டபடியால் இந்நகருக்கு உடுபதி என்ற பெயர் வந்தது. இங்கு பழமையானவை, சந்திரமௌளீஸ்வரர், அனந்தீஸ்வரர் ஆகிய இரு சிவாலயங்கள். இவ்விரண்டிலும் வழிபட்ட பின்னர் உடுப்பி கிருஷ்ணர் திருக்கோயிலுக்குச் சென்றோம். இக்கோயில் 800 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த மத்வாச்சாரிய சுவாமிகளால் நிறுவப்பட்டது. இக்கோயிலில் எப்பொழுதும் அன்பர்கள் குழுமி வழிபடுகின்றனர். மத்வருடைய 8 மடங்கள் கோயிலைச் சுற்றியுள்ள திருவீதியில் உள்ளன. அவைகளில் அவருடைய சீடர்கள் எண்மர் இருக்கின்றனர். இவர்கள் ஆண்டுக்கொருவராக கண்ணனை வழிபாடு செய்யும் உரிமை பெற்றவர்கள். இவர்கள் துறவிகள். கோபிகாலோலனாகிய கண்ணபிரானைத் துறவிகள் பக்தி சிரத்தையுடன் வழிபடும் காட்சி நெஞ்சுருக்கும் தன்மையனவாயிருக்கின்றது. இக்கோயில் கிழக்கு நோக்கி விளங்கிற்று. கனகதாசர் என்ற கீழ்குல பக்தரொருவர் ஏழை பங்காளனாகிய அண்ணலை வழிபட வரும்போது, மற்றவர்கள் தடை செய்தனர். கனகதாசர் கோயிலின் மேல்புரம் சென்று துதிக்க, கிழக்கு நோக்கி நின்ற பெருமான் மேற்கு நோக்கித் திரும்பி நின்றனர்; வாயிலும் அதற்கு ஏற்ப மேற்கில் அமைந்தது. தற்போது கிழக்கு நோக்கிய வாயில் மூடி, அதன் முன்னற் ஒரு உற்சவ மூர்த்தி வைக்கப்பட்டுள்ளது. மேற்குப் பக்கத்தில் சாளரம் போன்ற ஒன்பது சிறு துவாரங்களின் வழியே யாவரும் வணங்குதல் வேண்டும். வழிபாடு

செய்விக்கும் துறவிகள் மட்டும் பக்கவாட்டிலுள்ள வாயிலின் வழியாக உள்ளே செல்லலாம். கோயில், பெரிய தேர்கள், யானைகள் முதலிய செல்வ வளத்துடன் உள்ளது.

13—2—57 புதன் கிழமை.

உடுப்பியினின்றும் விடியற்காலை 5-மணிக்கு எங்கள் திருப்பயணம் தொடங்கியது. 5 மைல் தூரத்திலேயே **கலியாணபுரம்** என்ற ஊர் வந்தது. அங்கு **சுவர்ணபழகி** என்ற நதி குறுக்கிட்டது. இன்னும் புலரவில்லை குமரி இருள். உடனே ஆற்றைக் கடந்து அக்கரை செல்ல வேண்டும். இல்லாவிட்டால் எதிர்க்கரையில் உள்ள வண்டி போய்விடும். நதியைக்கடக்க இருந்தவை பாம்புப் படகு என்னும் குறுகிய அகல முள்ள படகுகள். இதுபோன்ற படகில் முன்பின் ஏறிப்பழக்கமில் லாத நாங்கள் வண்டியில் அமருவதுபோல தாறுமாருக உட்கார்ந்து கொண்டோம். முதற் படகில் நான் அமர்ந்திருந்தேன். குளிருக்காக பெரிய போர்வை, தலையில் உருமாலை, மடியில் பூசைப்பெட்டி. என் னுடன் அன்பர் M. கணபதி முதலியார், திருமதி ருக்மணியம்மாள் இன்னும் சிலர். படகோட்டியோ பொருப்பற்றவன். கரையில் பதிந் திருந்த படகை சடக்கென்று அசைத்து நீரில் தள்ளினுன். படகு படக் கென்று நீரில் கவிழ்ந்தது. யாவரும் முழங்கால் அளவு நீரில் விழுந்து தட்டுத் தடுமாறி கரைக்கு வந்தோம். உடைகள், சால்வை எல்லாம் நனைந்து விட்டன. உதய ஒளி வரும்வரையிலும் இக்கரையில் காத்தி ருப்போமென்றுல் படகோட்டி அதற்குச் சம்மதிக்கவில்லை. கோகரண நாதனைக்கண்டு வழிபட வேண்டும் என்ற ஆவல் எங்களைப் பிடர்பிடித்து உந்தியபடியால், வேறு உடைகளை மாற்றிக்கொண்டு மீண்டும் உடன் புறப்பட்டோம். அக்கரையில் **பத்ரகிரி** என்ற ஊரில் உந்து வண்டி ஏறினேம். 5 கல் போனதும் **மாப்புகலா** என்ற ஊர் அருகில் **சீதாபதி** என்ற ஆறு எதிர்ப்பட்டது. வண்டியை விட்டு இறங்கி, படகில் முன் அனுபவத்தால் நன்கு அமர்ந்து கொண்டோம். ஆற்றைக்கடந்து மீண்டும் உந்து வண்டி ஏறி, 14 கல் தொலைவிலுள்ள **குந்தாபுரம்** என்ற ஊரை அடைந்தோம். அங்கு **பஞ்ச கங்காநதி** என்ற பெரிய நதி கடலுடன் கலக்குகின்றது. $1\frac{1}{2}$ மைல் அகலமிருக்கும். அந்தநதியைப் படகில் ஏறிக்கடந்து அக்கரை சென்றோம். **கெங்கொள்ளி** என்ற ஊர்

அக்கரையில் உள்ளது; அங்கு சென்று மீண்டும் உந்து வண்டி ஏறி **உப்புந்தா** என்ற இடத்தில் ஒரு நதியைத் தாண்டினோம். அக்கரையில் **பைந்தூர்** என்ற ஊரை அடைந்தோம். இங்கு ஒரு சிவாலயமும், ஒரு திருக்குளமும் உள்ளன. இங்கு நீராடி வழிபாடு முடித்துக்கொண்டு காலை 10-மணி சுமாருக்கு ஏதோ சிற்றுண்டி அருந்திவிட்டு, உந்து வண்டி ஏறி 16 கல் தொலைவிலுள்ள **கொல்லூர்** என்னும் திருத்தலத்தை காலை 11½-மணி அளவில் சேர்ந்தோம். இது ஒரு சிற்றூர். கோயிலை அடுத்து குருக்கள்மார் வீடுகளும், சில சிற்றுண்டிக் கடைகளுமே உள்ளன. கோயில் குருக்கள் வீட்டிலேயே தங்கினோம். எங்கள் சாமான்களை இங்கு வைத்துவிட்டு நண்பகல் உணவிற்கு குருக்கள் வீட்டிலேயே செய்யச் சொல்லி விட்டு, குருக்கள் வீட்டிற்கு ஒரு பர்லாங்கு தூரத்திலுள்ள சிறிய ஓடையில் நீராடி வந்து, நண்பகல் உணவு உண்டு, ஓய்வு எடுத்துக் கொண்டு, மாலை 5-மணிக்கு திருக்கோவிலுக்கு வந்தோம்.

கொல்லூர்— முகாம்பிகை.

கொல்லூர் என்பது பல மலைகளுக்கு இடையில் வானளாவிய மரங்களடர்ந்த பெருங்காட்டின் நடுவில் உள்ள ஒரு அரிய திருத்தலம் இங்கு சுவாமியும். அம்பிகையும் ஒரே சுயம்புமூர்த்தியாக (தான் தோன்றியாக) எழுந்தருளி உள்ளனர். இம்மூர்த்தியில் உள்ள தங்க ரேகை ஒன்று சுவாமி அம்பிகையைப் பிரித்துக்காட்டுகின்றது. இம்மூர்த்தியின் இடப்பாகம் அதிகமாக உள்ளபடியால் இத்தலத்தில் அம்பிகையின் ஆதிக்கம் அதிகம். சுவாமி அம்பிகை லிங்க வடிவில் சுயம்புவாகத் தோன்றியுள்ளது எங்கும் காண்பதற்கரியது. இம்மூர்த்தியின் பின்னால் பஞ்ச லோகத்தால் செய்த அம்மையின் திருவுருவம் சங்கராச்சாரிய சுவாமிகளால் அமைக்கப்பட்டுள்ளது. அம்பிகையின் திருப்பெயர் **மூகாம்பிகை.** இரவு அந்த அருமையான அம்பிகையை அன்புடன் வழிபட்டோம்.

மூகாம்பிகை வரலாறு:—


கோலமா முனிவர் தவம் செய்து திருவருள் பெற்றது ஆதலினால் **கோலாபுரம்** என்று இதற்குப் பெயர் ஏற்பட்டது. கோலாபுரம் என்பது கொல்லூர் என இப்பொழுது வழங்குகின்றது.

மூகாசுரன் என்கின்ற ஒரு அசுரன் பிரமதேவரை நோக்கித் தவம் செய்து பல வரங்களைப்பெற்ருன். இந்தக் கானகத்தில் தவம் செய்யும் கோலமா முனிவர் முதலிய முனிவர்களுக்கு இடுக்கண்பல புரிந்தான். மூகாசுரனுடைய துன்பத்தைப் பொறுக்க மாட்டாத முனிவர்கள் அவனை அழிக்க வழியாது? என்று ஆராய்ந்தார்கள்.

மூகாசுரன், முனிவர்கள் தன்னைக் கொல்ல முயல்கின்ருர்கள் என் பதை அறிந்து சிவபெருமானை வேண்டிப் பெருந்தவம் புரிந்தான். இமையவரும், இருடிகளும் சிவபெருமானைத் துதித்தார்கள். சிவபெரு மான் தோன்றி, என்ன வரம் வேண்டும் என்று கேட்டனர். "பொங்கா வணிந்த சங்கரா! திங்கள் சூடிய கங்காதரா; மூகாசுரன் தேவரீரை நோக்கித் தவம் செய்கின்ருன். அவன் விரும்பும் வரங்களைத் தேவரீர் வழங்காதிருக்கவேண்டும்" என்று வேண்டினர்கள்.

சிவபெருமான் "நாம் வேண்டுவார் வேண்டியதை வேண்டியவாறு தரும் நியதியையுடையோம். நீங்கள் அம்பிகையை வேண்டி இதற்குப் பரிகாரம் தேடிக்கொள்ளுங்கள்" என்று அருள் புரிந்தார். முனிவர் களும் இமையவரும் "எந்தையே, தேவரீர் இங்ஙனமே இருந்து அருள் புரிய வேண்டும்" என்று வேண்டினர்கள். ஆலமுண்ட நீலகண்டப் பெருமான் அங்கு சிவலிங்க வடிவாக எழுந்தருளினர்.

பின்னர் தேவர்களும் முனிவர்களும் அம்பிகையை நோக்கிப் பெருந்தவம் புரிந்தார்கள். அவர்கள் தவத்திற்கு இரங்கி உமயம் மையார் தோன்றியருளினர். அமரர்களும் அருந்தவரும் அம்பிகை யைத் தொழுது, மூகாசுரனல் தங்களுக்கு நேரவிருக்கின்ற துன்பத் தினின்றும் காத்தருள வேண்டினர். அம்பிகையும் அவர்களுடைய வேண்டுதலுக்கு அருள் புரிந்தார். மூகாசுரன் வரம் கேட்க முடியாத வண்ணம் ஊமையாக்கினர். மூகாசுரன் வாய்திறந்து வரம் கேட்க முடியா வண்ணம் ஊமையானன். தன்னை ஊமையாக்கியது உமாதேவி யாரென்றுணர்ந்து அவள்மீது போருக்குப் புறப்பட்டான். அம்மை அவனுடன் போரிட்டு அவனைக் கொன்ருர். மூகம்—ஊமை. ஊமை யாகிய மூகாசுரனைக் கொன்றமையால், அவனுடைய பெயர் அழியா திருக்கும் பொருட்டு, அவனுடைய பெயரை அம்பிகை எற்று மூகாம் பிகை என்று யாவரும் போற்ற நின்று சிவபெருமானைப் பூஜித்தனர்.



அழகிய நந்தி மண்டபம்.
(ஹாலிபேய்டு)



மங்களாம்பிகை திருக்கோயில்.
(மங்களூர்)



கதிரி மஞ்சுநாதர் திருக்கோயில்.
(மங்களூர்)

இங்கு கலைமகளும் திருமகளும் இருபுறங்களிலும் அம்மைக்குச் சேடியர்களாக நிற்கின்றனர். மிகவும் வரதமான அம்பிகை சிவலிங்கத்தில் ஒரு பொன் ரேகை தெரிகின்றது. வெய்யிலில் கண்ணாடியை காட்டி அந்த ஒளி சிவலிங்கத்தின்மீது படச்செய்தால் அந்த பொன் ரேகை தெரிகின்றதாம். நாங்கள் சென்றது மாலை நேரமானபடியால் காணமுடியவில்லை.

எல்லாத் திருவாபரணங்களையும் சாத்தியலங்கரிக்கவும், பால் முழுக்காட்டவும் 16 ரூபாய் கோவிலுக்குக் கட்டினோம். அந்த ஆலய அதிகாரி எங்களை அன்புடன் வரவேற்றார். திருவாபரணங்களை எல்லாம் எடுத்து எங்கள் கையில் கொடுத்து பார்க்கும்படி சொன்னார். அதில் நளச்சக்ரவர்த்தி அம்பிகைக்கு அளித்த ஒரு பதக்கம் குறிப்பிடத்தக்கது. அதில் உள்ள ஒரு பெரிய பச்சை மட்டும் உள்ளங்கை அளவு உள்ளது. அதை 25 லக்ஷத்திற்கு மதிப்பிடுகின்றார்கள் என்று கூறினர். அவ்வளவு அழகிய பச்சையை நாங்கள் இதுவரை எங்கும் கண்டதே இல்லை. கோவிலின் வெளிப்பிரகாரம் விசாலமானது. விமானம் பொன் தகடு போர்த்தப்பட்டுள்ளது. அம்பிகை சிவலிங்கத்திற்குப் பின்புறம் பத்மாசனமிட்டு அமர்ந்து தவஞ் செய்கின்ற கோலத்தில் விளங்குகின்றனர். பார்க்கப் பார்க்கப் பரமானந்தமான தரிசனம். தனிமையையும் இனிமையும் உள்ள அந்த ஆலயத்தின் சிறப்பு நேரே கண்டவர்க்கே ஒருவாறு விளங்கும். இரவு அம்பிகையைக் கண்குளிரக்கண்டு உளங்குளிர வழிபட்டு மனிதப்பிறப்பின் பயன் பெற்றோம். ஆதிசங்கராச்சாரிய சுவாமிகள் இந்த அம்பிகையை வழிபட்டு 500 சுலோகங்கள் பாடி இருக்கின்றார். அதற்கு "மூக பஞ்சதி" என்று பெயர். இப்புண்ணியப் பதியில் சிலகாலம் தவமியற்றினர் என்று கூறுகின்றனர். இரவு குருக்கள் வீட்டிலேயே உணவருந்திவிட்டு கண்ணயர்ந்தோம். அதிகாலையில் கண்விழித்தோம்.

கோயிலுக்கு வடமேற்கில் ½ கல் தொலைவில் ஒரு அருமையான சிறு நதி ஓடுகின்றது. சான்றோர் உள்ளம் போல் தண்ணீர் தூய்மையாக இருக்கின்றது. இந்நதியில் எங்கள் உடைகளை எல்லாம் தோய்த்து, நன்றாக முழுகி, உடலும் உள்ளமும் குளிரப்பெற்றோம். குருக்கள்

வீட்டிற்கு அருகில் ஓடுவது ஒரு சிறு ஓடை; ஆனால் இதுவோ அழகிய சிறு நதி. அதைவிடப் பன்மடங்கு சிறப்புடையது. கண்கவர் காட்சியுடையது.

14—2—57 வியாழக்கிழமை.

காலை உணவிற்குப் பின்னர் உந்துவண்டி மூலம் பைந்தூர் வந்து சேர்ந்தோம். பைந்தூரிலுள்ள சிவாலயத்தில் உள்ள மூர்த்திகள் யாவும் வெகு அழகாக உள்ளன. 10-மணி அளவில் பைந்தூரிலிருந்து உந்துவண்டி மூலம் புறப்பட்டோம். அங்கிருந்து கோகரணம் 65 கல்; பைந்தூர்-பட்கல் 12 கல்; பட்கல்-காசர்கோடு 23 கல்; காசர்கோடு—கும்டா 12 கல்; கும்டா—கோகரணம் 18 கல்; ஆக 65 கல். பட்கல் என்ற இடத்திலும், ஒன்னவர் என்ற இடத்திலும், மீர்ஜான் என்ற இடத்திலும் நதிகள் வருகின்றன. அங்கு இரு இடங்களில் படகில் உந்துவண்டியுடன் ஏறிக் கடக்கவேண்டும். ஒரு இடத்தில் படகில் நாம் மட்டும் ஏறிக் கடந்து வேறு வண்டியில் ஏறிப்போக வேண்டும்.

மங்களூரிலிருந்து கோகரணம் போய்ச்சேர்வதற்குள் 7 நதிகளைக் கடக்க வேண்டும். உந்துவண்டி மேலைக் கடற்கரையோரமாகவே பெரும்பகுதி செல்கின்றது. படகில் ஏறுவதும் வண்டியைவிட்டு இறங்குவதும் மீண்டும் படகில் ஏறுவதும் இப்படியாக மூட்டை முடிச்சுகளுடன் பயணம் செய்வது பெருந்துன்பமாக இருந்தது. எனது படுக்கைச் சாமான்கள் எனது ஆருயிர் நண்பர் திருவாளர் V. பழனியப்ப செட்டியார் அவர்கள் படுக்கையுடன் ஒன்றுயிருந்தது. தூக்குவதற்கு ஆள் கிடைக்காத இடத்தில் அவர்களே எடுத்துவந்தது எனது உள்ளத்தை வாட்டியது. என்னிடத்தில் பூசைப் பெட்டி, கைப்பை முதலியன இருந்தபடியால் படுக்கையைப்பற்றி அவருக்குத் துணை செய்ய என்னால் இயலவில்லை. நட்பு எக்காரியத்தைத்தான் செய்யத்துணியாது. அவர்போன்றே உடன் வந்த அன்பர்கள் பலரும் எனக்கு வேண்டிய உதவிகள் செய்து பயணத்தில் எனக்குள்ள சிரமத்தைக் குறைத்தனர். கோகரண நாதரைக் காணவேண்டுமென்ற காதல் எங்களுடைய எல்லாத் துன்பங்களையும் மறைத்தது. துன்பத்தின்

முடிவிலே இன்பம் என்பது ஆன்ஞேர் கண்ட உண்மை. நாங்கள் பசியினுலும், வண்டி நெருக்கடியாலும் (இந்தப் பகுதிகளில் வண்டியில் இத்தனைபேர்தான் ஏறுவது என்ற கணக்கே இல்லை. மக்களை வண்டிக்குள், தலையணைக்குப் பஞ்சு, துறுத்துவதுபோல் துறுத்துகின்றனர்) படகிற்கும் வண்டிக்கும் மூட்டை முடிச்சுகளைச் சுமப்பதினுலும் ஏற்படுகின்ற இடர்களைத் தாங்கிக்கொண்டு இரவு 10-மணி சுமாருக்கு கோகரணம் போய்ச்சேர்ந்தோம். கோகரணம் வந்துவிட்டோம் என்று நினைத்த மாத்திரத்தில், உள்ளம் அணை கடந்த வெள்ளம்போல் பொங்கிற்று கோகரணத்தில் சுப்பா பட்டர், சேஷ பட்டர் வீட்டில் தங்கினேம். அவர் வீடு மிகப் பெரியது, நூற்றுக்கணக்கானபேர் தங்க சிவராத்திரிக்கு வசதி செய்துள்ளார்கள். இரவு அவர்கள் கொடுத்த சிற்றுண்டியை உண்டுவிட்டுக் கண் அயர்ந்தோம்.

மங்களூரிலிருந்து கோகரணத்திற்கு போகும் இந்த வழியில் குறுக்கிடும் நதிகளைக் கடக்க தக்க பாலம் அமைத்தல் மிக இன்றியமையாத காரியமாகும். இதனுல் எவ்வளவோ சிரமமும்; பொருளும் காலமும் இலாபமாகும். இந்தப்பகுதி அரசாங்கத்தால் கவனிக்கப் படவில்லை என்றே தோன்றுகின்றது. பாதைகளும் மிகமோசம்.

15—2—57 வெள்ளிக்கிழமை.

கோகரணம்.

அதிகாலையில் திருப்பள்ளியெழுச்சி ஓதியவண்ணம் எழுந்தோம். திருக்கோயிலுக்கு தென் கிழக்கில் கோடி தீர்த்தம் உளது. அது மிகப்பெரிய திருக்குளம், எங்கும் மார்பளவு தண்ணீர். நடுக்குளத்தில் நீராழி மண்டபம். அதில் ஒரு சிவலிங்கம் உள்ளது. ஒரே சமயத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் இத்திருக்குளத்தில் நீராடலாம். இப்புனித தீர்த்தத்தில் நீராடி இருப்பிடம் வந்து வழக்கமாகச் செய்யும் ஆத்மார்த்த மூர்த்தியை வழிபட்டோம். என்னுடன் ஆத்மார்த்த சிவபூசை செய்பவர் திரு கு. சி. கந்தசாமி முதலியார். மற்ற அன்பர்களும் இவ்வழிபாட்டில் கலந்து திருநீறுபெற்று அணிந்துகொண்டனர்.

முதல் நாளே 51 ரூபாய் திருக்கோயிலுக்குக்கட்டி சிறப்பு வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்திருந்தோம். தங்குமிடத்திலிருந்து வழி

பாட்டுப் பொருள்களுடன் திருமுறைகளை ஓதிக்கொண்டு திருக்கோயி லுக்குப் புறப்பட்டோம். முதலில் பிள்ளையார் திருக்கோயிலுக்குச் சென்றோம். பிள்ளையார் இரண்டு திருக்கரத்துடன் வெகு கெம்பீரமாக நின்ற கோலத்துடன் விளங்குகின்றார். இப்பெருமானை நீர் வார்த்து திருமேனியைத்தீண்டி வழிபட்டோம் விநாயகப் பெருமான் தலையில் இராவணனால் குட்டப்பட்ட ஒரு வடு காணப்படுகின்றது. அது இரண்டு அங்குல ஆழம், 3 அங்குல நீளமும் இருக்கும். அன்பர்க்கு வரும் இடையூறை நீக்கியருள வல்ல, விநாயகப்பெருமானை வழிபட்டு, மகாபலநாதர் வழிபாடு சித்திக்கும் வண்ணம் வேண்டிக்கொண்டு மகா பலநாதர் கோயிலுக்குச் சென்றோம். திருக்கோயிலை வலம் வந்தோம். நீண்டகாலமாக மனக்கண்ணால் பார்த்துக் கொண்டிருந்த மகாபல நாதரை புறக்கண்ணால் கண்டு வழிபடும்பேறு பெற்றமைக்கு பெரிதும் மகிழ்ந்தோம். திருக்கோயிலை வலம்வந்து கால்களின் பயனைப்பெற்றோம்.

திருக்கோயில்.

திருக்கோயிலுக்கு இரண்டு பிரகாரம் உள்ளது வெளிப்பிரகாரம் விசாலமானது. உள் சுற்றில் சண்டிகேஸ்வரர் திருவுருவம் சிவலிங்க வடிவிலுள்ளது. திருக்கோயில் மேற்கு நோக்கி, கடற்கரையிலுள்ளது. கோயில் வாயிற்படியில் நின்று பார்த்தால் கடல் தெரிகின்றது. கடல் கூப்பிடும் தூரத்திலுள்ளது. திருக்கோயிலின் விமானம் தஞ்சைக் கோயில்போல் மிக உயரமாகக் கெம்பீரமாய் விளங்குகின்றது. திருக் கோயில் தமிழ் நாட்டுக்கோயிலைப்போல் மிகப்பெரிதாக இல்லாவிட்டா லும் நடுத்தரமானது. எனினும், கோயில் எடுப்பாகத் தோன்று கின்றது. தமிழ்நாட்டுக் கோயில்கள் போல் தடையேதுமின்றி கருவறைக்குள் சென்றோம். எங்கள் திருக்கூட்டத்தினர் 46 பேரும் நிற்கும் அளவு கருவறை விசாலமுடையது. கோகரண நாதருக்கு எங்கள் கையால் தொட்டு திருமுழுக்காட்டி வழிபட்டோம். சிவலிங் கம் மிகச்சிறியது. கொட்டைப்பாக்கு அளவே உள்ளது. அதுவும் ஆவுடையார்க்குள்ளே விளங்குகின்றது. கோகரணம் மிகப் பழமையான திருத்தலம். இராவணன் காலத்தில் வந்த சிவலிங்கம். எத்தனையோ ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குமுன், ஏற்பட்ட அரிய பெரிய தலம். எத்தனையோ மகான்கள் அடியார்கள், ஞானிகள், பக்தர்கள் வந்து

வழிபட்ட புனிதமான புண்ணியத்தலம். எங்கள் குலஞ் செய்த தவத்தால் அதனை வலஞ் செய்து வணங்கும் பேறு எங்களுக்குக் கிட்டியது மகாபல நாதரை உளங்குளிர, உடம்பெல்லாம் நெக்கு நெக்குருக வழிபட்டு ஒருவாறு வெளிப்போந்து அம்பிகையின் திருக்கோயிலை அடையப்போகும் வழியில், வெளிச்சுற்றில் ஆதிகோகரணம் என்னும் ஆலயம் உள்ளது. இதனுள் சிவலிங்கம் முழங்கால் அளவு தண்ணீரினுள் இருக்கின்றது. இத்திருக்கோயில் இராவணன் வருவதற்கு முன்னுள்ள தென்கின்றனர். இப்பெருமானையும் வழிபட்டு அம்மையை வழிபடச் சென்றோம். அம்மையின் திருக்கோயில் சுவாமியின் கோயிலுக்கு பின்புறம் **கிழக்குப் பார்த்த கோயில்.** அம்மையின் பெயர் பிரசன்ன பார்வதி. அம்பிகை கையில் தராசு வைத்துக் கொண்டு ஒரு தட்டில் காசியும் மறு தட்டில் கோகரணமும் வைத்து நிறுப்பதாக ஐதீகம். காசியைவிடக் கோகரணம் பெருமை மிக்கது ஆகையால், கோகரணத் தட்டு தாழ்ந்து உள்ளது. அம்மையின் அருளைப்பெற்று எங்கள் தங்குமிடத்திற்குச் சென்றோம். இங்கு அன்பர்களுக்குத் திருக்கோகரணத்தின் பெருமை கூறப்பட்டது.

கோகரண வரலாறு.

இராவணன் திருக்கோயிலையை அடைந்து தவம் பல புரிந்து இறைவனிடம் ஆன்மார்த்த பூசை இயற்ற சிவலிங்கம் ஒன்று வேண்டினான்.

வேண்டுவார் வேண்டுவதே ஈயவல்ல விமலன் அவன் விருப்பப்படி அரிய சிவலிங்கமொன்றை கொடுத்தருளினார். இது கண்ட தேவர்கள் இவ்வரிய மூர்த்தியை இராவணன் இலங்கையில் நிறுவி வழிபடுவானேயானால், இவனை அழிப்பது யாராலும் இயலாதாகையால், அம்மூர்த்தியை இடையில் எங்காவது ஒரு தலத்தில் தடுத்து நிறுவியருள, விநாயகப் பெருமானை வேண்டினர். விநாயகப் பெருமான் தேவர்களின் வேண்டுதலை நிறைவேற்ற எண்ணி, இராவணனுக்கு சிறுநீர் உபாதையை உண்டாக்கினார். இராவணன் தன் கையிலுள்ள சிவலிங்கத்தை யாரிடமாவது கொடுத்துவிட்டு சிறுநீர் கழிக்க எண்ணி சுற்றுமுற்றும் பார்த்தான். அதுசமயம் விநாயகப் பெருமான் அந்தணச் சிறுவராக முன்னின்றார். இராவணன் தன் கையிலுள்ள சிவலிங்கத்தை அச்

சிறுவன் கையில் கொடுத்து விட்டு, சிறுநீர் கழிக்கச் சென்ருன். விநாயகப் பெருமான் சிறிது நேரத்தில் இராவணனை மும்முறை அழைத்தார். அவனுக்கோ சிறுநீர் போய்க்கொண்டே இருக்கின்றது. என் செய்வான்? மூன்று முறை அழைத்தும் வராதபடியால், விநாயகப் பெருமான், அச்சிவலிங்கத்தை நிலத்தில் வைத்துவிட்டார். இராவணன் ஓடிவந்தான். தான் வருவதற்குள் கீழே வைத்ததற்காக, எல்லோரையும் தன் முன்னிலையில் குட்டிக்கொள்ளச் செய்யும் பெருமானுகிய விநாயகப் பெருமான் தலையில் ஒரு குட்டுக்குட்டினுன். அந்தக் குட்டின் வடு இன்றளவும் விளங்கும்படி விநாயகப் பெருமான் இத்தலத்தில் விளங்குகின்ருர். கயிலையைப் பேர்த்தெடுத்த தசமுகன் அச்சிறு சிவலிங்கத்தைத் தன் பலங்கொண்ட மட்டும் பெயர்த்தெடுக்க முயன்ருன். ஆனல் அவனல் அதை எடுக்க இயலாமற் போயிற்று. இறைவனும் மகாபலீஸ்வரர் என்ற திருப் பெயரும் பெற்ருர். இராவணன் எடுக்க முயற்சித்த போது சிவலிங்கம் பசுவின் காது போல் குழைந்து தோன்றிற்று. பசு—கோ, கர்ணம்—காது. இதனல் இத்தலத்திற்குக் கோகரணம் என்று பெயர் வந்தது. சிவலிங்கம் மட்டுமின்றி, சிவலிங்கம் உள்ள குழியும் பசுவின் காதுபோல் தோன்றுகின்றது. பிறகு வேறு வழியின்றி இராவணன் இறைவனை அங்கேயே வழிபட்டு இலங்கை சென்ருன். இப்பெருமானை அப்பமூர்த்திகள் அரிதில் சென்று தரிசித்து "கால்களாற் பயன் திருக்கோகரண நாதனை வழிபடுதலே" என்று திருவங்கமாலையில் பாடி அருளினர். இதுவன்றியும் திருக்கோகரண நாதன் மீது ஒரு அரிய திருத்தாண்டகப் பதிகம்பாடி அருளி இருக்கின்ருர்கள்.

திருஞான சம்பந்தப் பெருமான் தொண்டை நாட்டுத் திருப்பயணத்தின் போது வடக்கே திருக்காளத்தி மலை வரையில் சென்று இறைவனை வழிபட்டு, அப்பதிக்கும் வடக்கிலுள்ள தலங்கள் வேற்று மொழி வழங்கும் நாடாதலால், தமிழ் நாட்டிலுள்ள தலங்களைத் தாம் சென்று வழிபட்டுப் பாடியருளியது போன்று திருக்காளத்தி மலை மீதினின்றே தன் யோகக் காட்சியால், வட நாட்டிலுள்ள திருக்கயிலை, திருக்கேதாரம், அநேகதங்காவதம் முதலிய தலங்களையும், திருக்கோகரணத்தையும் கண்டு அகத்தே வழிபட்டுத் திருப்பதிகங்கள் பாடி அருளினர் என்று சேக்கிழார் பெருமான் தாம் பாடியருளிய பெரிய புராண நூலில் கீழ்வரும் பாடல்களால் அருளிச்செய்திருக்கின்ருர்கள்.

அங்கண்வட திசைமேலும் குடக்கின்மேலும்
அருந் தமிழின் வழக்கங்கு நிகழா தாகத்,
திங்கள் புனைமுடியார் தங், தானந்தோறும் சென்று தமிழ்
இசைபாடும் செய்கை போல
மங்கையுடன் வானவர்கள் போற்றிசைப்ப
வீற்றிருந் தார் வடகயிலை வணங்கிப் பாடிச்
செங்கமல மலர் வாவித் திருக் கேதாரம்
தொழுது திருப் பதிகஇசை திருந்தப்பாடி.

குடக்கு—மேற்கு. மேற்கிலுள்ளது கோகரணம்.

கூற்றுதைத்தார் மகிழ்ந்த **கோகரணம்** பாடிக்
குலவுதிருப் பருப்பதத்தின் கொள்கைபாடி
ஏற்றின்மிசை வருவார் இந்திரன்றன் நீலப்பருப்பதமும்
பாடி மற்றிறைவர் தானம்
போற்றிய சொன் மலர்மாலை பிறவும் பாடிப்
புகலியர்தம் பெருந்தகையார் புனிதமாகும்
நீற்றின் அணி கோலத்துத் தொண்டர் சூழ
நெடிது மகிழ்ந்து அப்பதியில் நிலவுகின்றார்.

திருஞானசம்பந்தப் பெருமான் இப் பெருமானை உளங்குளிர, அகம் நெகிழ பொருள் செறிவுடன் பத்துப் பாடல்கள் பாடி அருளியுள்ளார் கள். அதில் ஒன்று பின் வருமாறு.

என்றுமறியான் அயலவர்க்கு இயலிசைப் பொருள்களாகியெனதுள்
நன்றும் ஒளியான் ஒளி சிறந்த பொன்முடிக் கடவுள் நண்ணும் இடமாம்
ஒன்றிய மனத்தடியர் கூடியிமையோர் பரவு நீடரவமார்,
குன்றுகள் நெருங்கி விரிதண்டலை மிடைந்து வளர் கோகரணமே.

சம்பந்தப்பெருமான் பாடல் தோறும், **இடமாம்**, **இடமாம்** என்று குறிப்பிடுகின்றார்கள். அது, பெருமான் நேரில் சென்று தரிசிக்கவில்லை என்பது குறிப்புப் போலும்.

ஆனல் கோகரணத்தை நேரில் சென்று வழிபட்ட ஒருவர், சம்பந்தர் தேவாரத்தையும் சிந்திக்கும் போது நேரில் காண்பதே போன்று அத்தலம் தோன்றும். நந்தம் பெருமக்கள் இருந்த இடத்தினின்றே தம் யோகக் காட்சியால் உணர்ந்து பாடவல்லார்கள் என்பதை இப்பதிகத்தை சிந்திக்கில் தெள்ளென விளங்கும்.

கோகரணம் குன்றுகள் பல சூழ்ந்த இடம். தென்னை, கமுகு முதலிய சோலை நெருங்கி வளர்ந்து, ஊர், தோப்புப்போல் விளங்குகின்றது. அன்பர்கள் எப்பொழுதும் கூடி, நீர் வார்த்து, மலரிட்டு வணங்குகின்றனர். இவைகள் இன்றும் நாம் காண்கின்ற காட்சிகள். இதைச் சம்பந்தப்பெருமான்

"ஒன்றிய மனத்தடியர் கூடி இமையோர் பரவு
நீடரவமார், குன்றுகள் நெறுங்கி விரிதண்டலை
மிடைந்து வளர் கோகரணமே."

என்று குறிப்பிடுகின்றார்கள். இனித்தமிழ் நாட்டில் கருவறையினுள் ஆதிசைவர்களன்றி மற்றையவர் உள் செல்ல அனுமதியில்லை. ஆதிசைவரினுள்ளும் பெண்கள் கருவறையினுள் செல்ல விதி இல்லை. ஆனல் திருக்கோகரணத்திலோ நாட்டின் பல பாகங்களினின்றும் ஆடவரும் பெண்டிரும் நிறைந்து வந்து

"புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள் செயா நிற்கும்."

என்னும் பொன்மொழியை மெய்ப்பிக்கும் வண்ணம் கருவறை புகுந்து நீர் சொறிந்து, மலர் தூவி வணங்கும் காட்சியே இன்றும் நாம் காண்கின்ற காட்சி. இதைச் சம்பந்தப்பெருமான் தமது இரண்டாவது பாட்டில்

"மாதரொடு ஆடவர்கள் வந்தடி இறைஞ்சி
நிறை மாமலர்கள் தூய்க்
கோதைவரி வண்டிசைகொள் கீதம் முரல்
கின்றவளர் கோகரணமே."

என்று குறிப்பிடுகின்றனர்.

இனி நண்பகல் உணவு, ஓய்விற்குப்பிறகு மாலை கடற்கரைக்குப் போய் கடற்கரையின் மணற் பரப்பில் அந்தி வெய்யிலில் மூழ்கி ஆனந்தித்தோம். மாலை அநுட்டானங்களை முடித்துக் கொண்டு திருக் கோயிலுக்கு மீண்டும் சென்று வழிபட்டோம்.

16—2—57 சனிக்கிழமை.

இன்று அதிகாலையில் துயிலெழுந்து கடலில் நீராடினோம். கடற் கரையோரத்தில் சிறு குன்று. அதில், மூன்று சிற்றருவிகள் ஒரு குளத்தில் விழுகின்றது இதை இராமர் தீர்த்தம், இலக்குமண தீர்த்தம், சீதா தீர்த்தம் என்று கூறுகின்றனர். இதிலும் நீராடி நீறு புனைந்து திருக்கோயிலுக்குச் சென்று, மூன்றும் முறை நீர் வார்த்து கோகரண நாதரை வழிபட்டோம். மேற்கண்ட அருவிகளுக்கு மேல் சிறிது தூரம் சென்று, ஒரு குன்றின் மீது ஏறி, மீண்டும் இறங்கினால் மலை பிளந்தது போன்று ஒரு இயற்கையான இடம். அதன் நடுவில் சோனை போல் தண்ணீர் சிந்தியவண்ண மிருக்கின்றது. அங்கு ஒரு சிவலிங்கம் காணப்படுகின்றது. அதை ஜடாயு தீர்த்தம் என்று கூறுகின்றார்கள்.

மாலை கடற்கரைக்கு வந்தோம். மகாபலநாதரை வழிபட்டபடியால் அன்பர்கள் ஆன்மபலத்தையும் இளமை நலமிக்க உடல் பலத்தையும் பெற்று மகிழ்ந்தபடியால், அன்பர்கள் தங்கள் வயதையும் மறந்து பளீஞ் சடுகுடு, துள்ளி விளையாடினர். இது கண்ட அந்த ஊர் பெரிய மாணவர்களும், எங்களுடன் கலந்து விளையாடினர். தாய்மார்கள் ஊக்கு, ஊக்கு, கும்மி, ஓட்டப்பந்தயம் விளையாடினர். இரவு மகாபல நாதரை வழிபட்டு இருப்பிடம் சென்று, கண் அயர்ந்தோம்.

17—2—57 ஞாயிற்றுக்கிழமை.

அதிகாலை துயிலெழுந்து வழிபாட்டை முடித்துக் கொண்டு, கோகரண நாதன் திருக்கோயிலுக்குச் சென்று இப்பெருமானை இனி எப்பொழுது வந்து வணங்கப் போகின்றோம் என்ற ஏக்கத்துடன் வணங்கி மகாபல நாதரிடம் பிரியாமல் பிரிந்து விடைபெற்றுக்கொண்டு பூலோக கயிலாயமாகிய திருக்கோகரணத்தினின்றும் உந்து வண்டியின் மூலம் புறப்பட்டோம். எங்கள் திருக்கூட்டம் 46 பேராகையால் ஒரே வண்டியில் செல்ல முடியவில்லை. திருக்கூட்டம் ஒன்றின் பின் ஒன்றாக

இரண்டு வண்டிகளிலே செல்லவேண்டிய ஊர்களுக்குப்போய்ச்சேர்ந்து கொள்ள வேண்டி இருந்தது. இந்த திருப்பயணம் பூராவும் தமிழ் மொழி வழங்காத கன்னட மொழி பேசும் நாடாதலால், கன்னட மொழி தெரிந்த R. M. இராமசாமி செட்டியார் ஒரு கூட்டத்திற்கும், C. சாமியப்பசெட்டியார் ஒருகூட்டத்திற்கும் தலைமை தாங்கி நடாத்தி வருவார்கள். R. M. இராமசாமி செட்டியார் அவர்கள் வயதில் சற்று பெரியவர்; சாமியப்ப செட்டியார் சற்று இளைஞர். இவ்விரு அன்பர் களின் தலைமையில் திருக்கூட்டம் பிரிந்து புறப்படுவதும், மீண்டும் குறித்த இடத்தில் சேர்ந்துகொள்ளும் இக்காட்சி அப்பர், சம்பந்தர் ஆகிய இருபெருமான்களும் சேர்ந்து யாத்திரை செய்த காலத்தில் அப்பாடிகள் தமது தொண்டர்களுடன் முன்னற் புறப்படுவதும், அவர்கள் குறித்த இடத்தில் சென்று சேர்ந்த பிறகு சம்பந்தப்பெரு மான் தமது தொண்டர்களுடன் புறப்பட்டுச்சென்று சேர்ந்து கொள்ளுவதுமாகிய காட்சியை நினைவூட்டியது.

நாங்கள் தங்கி இருந்த வீட்டுப்பட்டர் அவர்கள் மிகநல்லவர்கள். அப்பன், மகன், குடும்பப் பெண்கள் யாவரும் ஒரு மனப்பட்டவர்கள். அவர்கள் யாவரும் ஒன்றுபோல் எங்களை உணவிட்டு, உபசரித்து, வழி படச்செய்து வண்டி ஏற்றி அனுப்பிக்கொடுக்கும் வரையிலும் அன் புடன் உதவினர்.

கோகரணத்தில் காலை 8-மணி சுமாருக்குப் புறப்பட்ட முதற் கூட்டம் பகல் 2-மணி சுமாருக்கு சிர்சி என்னும் நகர் வந்து சேர்ந் தோம். இது பெரிய நகரம். எல்லாவிதமான வசதிகளுமுடைய பெரிய ஊர். உந்து வண்டிகள் பல பாகங்களுக்குச் செல்லுகின்றன. நாங்கள் கோகரணம் வந்த வழியாகிய மங்களூர், உடுப்பி, பைந்தூர் வழியாக வருவதன்றி, மைசூரிலிருந்து, புகைவண்டி மூலம் பீரூர் சந்திப்பு வந்து அங்கிருந்து தாலக்குப்பா, செல்லும் கிளைப்பாதையில் புகைவண்டி ஏறி தாலக்குப்பா அல்லது சாகர் வந்து இறங்கி இங்கிருந்து உந்து வண்டி (பஸ்) மூலம் இந்த சிர்சி வந்து இங்கிருந்து கோகரணம், உந்து வண்டி மூலம் செல்லலாம். இந்த வழியில் ஏறி இறங்கி படகுகளில் நதிகளை கடக்க வேண்டிய சிரமம் அதிகம் இல்லை. கோகரணத்திலிருந்து சிர்சி வரும் வரை இயற்கை அழகுமிக்க காடடர்ந்த மலைப்பாதை. மலைமீது

ஏறியும் இறங்கியும் பாதை செல்கின்றது மாலை 4-மணி வரையிலும் இரண்டாவது கூட்டம் சிர்சி வந்து சேராதபடியால் எங்களுடன் வந்த அன்பர் M. S. மாரிமுத்து முதலியார் அவர்களை சிர்சியில் இருத்தி, இரண்டாவது கூட்டம் வந்தால் அழைத்து வரும்படிச் சொல்லிவிட்டு, நாங்கள் ஜோக் பால்ஸ் என்னும் ஜோக் அருவியைக்காண உந்துவண்டியில் புறப்பட்டு இரவு 7-மணி சுமாருக்கு ஜோக் அருவியை அடைந்தோம். இடையில் படகில் ஒரு நதியைக் கடந்தோம். அன்றிரவு அங்குள்ள உணவுச்சாலையில் தங்கினோம்.

18—2—57 திங்கள் கிழமை. ஜோக் அருவி.

ஜோக் அருவி பெயருக்கேற்ப மிக சோக்கானது. 894 அடி உயரத்திலிருந்து சரவதி என்ற நதி பல கிளைகளாகப் பிரிந்து ஒரு பெரும் பள்ளத்தில் விழுந்து நதியாக ஓடுகின்றது. அருவி விழும் பள்ளத்தை அடைய ஆயிரம் படிகள் இறங்கிப்போக வேண்டும். அருவியில் இறங்கி நீராடும் வசதி இல்லை. இங்குள்ள குழாய்களில்தான் நீராடினோம். வழிபாட்டை முடித்துக் கொண்டு மேலே நின்ற வண்ணம் அருவியைக் கண்டு களித்தோம். சுற்றிலும் மலைகள், வானளாவிய மரங்கள். அழகெனும் நங்கை களிநடம் புரியும் அற்புதமான இடம். பல நாள் தங்கி இருப்பதற்கேற்ப உணவுச்சாலை, தங்குமிடங்கள் பல உள்ளன. பொருள் வசதியும், கால வசதியுமிருப்பின் சில நாட்கள் இங்கு தங்கி இருப்பின் மன அமைதி பெறலாம். நாங்கள் சென்ற சமயம் தங்கும் இடங்களில் அன்பர்கள் நிறைந்துவிட்டபடியால், எங்களுக்கு வசதியான இடமின்மையால் உடன் புறப்பட வேண்டியதாயிற்று இன்று 11-மணி சுமாருக்குத் தான் எங்கள் இரண்டாவது கூட்டம் வந்து சேர்ந்தது. நண்பகல் உணவிற்குப்பின்னர் பெரிய வ்ண்டியாகையால் யாவரும் ஒரே வண்டியில் புறப்பட்டு மாலையில் தாலக்குப்பா, புகை வண்டி நிலையத்திற்கு வந்தோம். புகை வண்டியில் மாலை 5-மணி சுமாருக்கு ஏறி விடியற்காலை 5-மணி சுமாருக்கு ஹாசன் என்னும் புகை வண்டி நிலையத்தில் இறங்கி, உந்துவண்டி மூலம் பேலூர் காலை 7-மணிக்குச் சேர்ந்தோம் ஹாசன்—பேலூர் 22 மைல்.

19—2—57 செவ்வாய்க்கிழமை.


பேலூர்—காலிபைடு.

பேலூர், ஒரு காலத்தில் ஹொய்சலர் என்ற அரச பரம்பரையின ரின் தலைநகரம். இவர்கள் 8-ஆம் நூற்றுண்டு முதல் 12-ஆம் நூற் ருண்டு வரையிலும் சிறந்து விளங்கினர். இவர்களில், இராமாநுஜ ஆச்சாரிய மூர்த்திகளாகிய வைணவப் பெரியார் சமணனுக இருந்த அரசனை வைணவத்திற்கு மாற்றி அவன் மூலம் சென்னகேசவப்பெரு மாள் கோவிலை இந்நகரில் எடுப்பித்தார். அம்மன்னனே விஷ்ணுவர்த் தனன் என்னும் புகழ் படைத்த மன்னன். இவனுல் எடுக்கப்பட்ட இக்கோயிலைப்பற்றி எழுதப் புகுந்தால் அதுவே ஒரு தனி நூலாகும். இதைக் கோயில் என்பதைவிட சிற்பக்கலைக்கூடம் என்று கூறலாம். சிற்ப வேலைப்பாடில்லாத ஒரு சாண் சுவற்றையும் இக்கோயிலில் நாம் பார்ப்பது அரிது. இக்கோயிலை நேரில் கண்டவர்க்கன்றி இதன் சிற்ப நுட்பத்தை எத்தகை அறிஞராலும் எழுதியோ சொல்லியோ பிறருக்கு இதன் பெருமையை உணர்த்த இயலாது.

இக்கோயிலுக்கு அருகிலுள்ள ஒரு மடத்தில் எங்கள் சாமான்களை வைத்துவிட்டு நீராட திருக்குளத்திற்குச் சென்றோம். இது ஒரு பெரிய ஏரி. இரு புறங்களில் மட்டும் படித்துறைகள் கட்டப்பட்டுள்ளன. படி களை நன்கு திருப்பணி செய்யப்பட வேண்டிய நிலையிலுள்ளன. நீராடி வழிபாட்டை முடித்துக்கொண்டு கோயிலுக்குச் சென்றோம். முன் கோபுரம் தமிழ் நாட்டுக்கோயிலைப்போன்று எடுப்பாகப் பெருந் தோற் றத்துடன் விளங்குகின்றது. முன் கோபுரத்தை அடுத்து பெரிய பிர காரம். பிரகாரத்தைத் தாண்டினுல் கோயில் விமானங்கள் ஒன்றுமின்றி மொட்டையாக இருக்கின்றது கோயில் எடுப்பாகத் தோன்றவில்லை. முதலில் எளிய தோற்றத்தோடுதான் காட்சியளிக்கின்றது. ஆனுல் அதன் சிற்பங்களை கவனிக்கத் தொடங்கினுல் நமக்கு வியப்பை உண் டாக்குகின்றது கோயிலின் புறச்சுவர் முழுதும் சிறிதிடம் பாக்கி இல் லாமல், இராமாயணம், பாரதம் பாகவதம் முதலிய வரலாற்றுச் சிற்பங் களையும், நடன மங்கையர், கண்ணுடியில் முகம் பார்க்கும் பெண், முத லிய அற்புதச் சிற்பங்களையும் பார்க்கலாம். கோயிலுக்குள் மண்டபத் தில் நன்கு சிற்பங்களைப் பார்க்கவும், புகைப்படம் எடுக்கவும் கூடிய வகையில் பெரிய மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. கருவறை



நடன மாது
(பேலூர் கோயில் சிற்பம்)



பேலூர் திருக்கோயில்



முகம் பார்க்கும் அழகி
(பேலூர் கோயில் சிற்பம்)

யிலுள்ள சென்னகேசவப்பெருமாள் நின்ற திருக்கோலத்துடன் சுமார் 12 அடி உயரத்தில் கெம்பீரமாய் விளங்குகின்றார். சிற்ப நுட்பங்களை ஒருவாறு கண்டுகளித்து விட்டுப் பெருமாளையும் வணங்கி, நண்பகல் உணவை உண்டிச்சாலையில் அருந்திவிட்டு இங்கிருந்து 11 மைல் தூரத்திலுள்ள காலிபைடு என்னும் ஊருக்கு உந்துவண்டி மூலம் புறப்பட்டுச்சென்றோம்.

காலிபைடு.

இத்திருக்கோயில் ஒரு சிவாலயம். இங்கு ஹொய்சலேஸ்வரர் திருக்கோயில் வெகு அழகுடன் விளங்குகின்றது. இக்கோயிலும் முன்னற்சொல்லிய விஷ்ணுவர்த்தனல் கட்டப்பட்டது. இக்கோயில் சிற்பங்களும் கோயிலும் பேலூர் கோயிலைப்போன்றது. இக்கோயிலில் இரு சிவாலயம் இருக்கின்றன். நந்திகளிரண்டும் “கண்கள் எண்ணிலாதன வேண்டும்'' இக்காளைகளைக்காண என்று தோன்றுகின்றது. இக்கோயிலில் காணப்படும் சிற்பங்கள் யாவும் சிவபுராணங்களில் கூறப்படும் வரலாறுகளாகும். பேலூரிலுள்ள சென்னகேசவப்பெருமாள் கோயில், காலிபைடிலுள்ள இச்சிவாலயம், மைசூருக்கு அருகிலுள்ள சோமனுத பூர்க்கோயில் ஆகிய மூன்றும் மேற்சொன்ன விஷ்ணுவர்த்தனல் ஜகனுதாச்சாரி என்ற சிற்பியைக்கொண்டு கட்டப்பட்டதாகத்தெரிகின்றது. முகமதியர்கள் காலத்தில் இக்கோயில்கள் சிதைக்கப்பட்டு சமீபத்தில் காலஞ்சென்ற மைசூர் அரசரால் புதுப்பிக்கப்பட்டு நன்கு கவனிக்கப்படுகின்றன.

ஆனல், சோமனுதபுரம் சிறு கிராமம். கோயிலும் வழிபாட்டு நிலையிலில்லை. பழம்பொருள் பாதுகாப்பு நிலையத்தின் பொருப்பிலுள்ளது. சிற்பங்களை நன்கு பார்ப்பதற்கேற்ப மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. கருவறைகளிலுள்ள மூர்த்திகள் சிதைந்த நிலையிலுள்ளன. காலிபைடு திருக்கோயிலின் சிற்பங்கள், பேலூர் சிற்பத்திற்கு எந்த விதத்திலும் குறைந்ததல்ல. காலிபைடிலிருந்து புறப்பட்டு உந்துவண்டி மூலம் இரவு 8-மணி, சுமாருக்கு சரவணபெல்கோலா என்னும் சமணர் புண்ணிய தலத்திற்கு வந்து, சமண மடம் ஒன்றில் தங்கினேம்.

20—2—57 புதன்கிழமை

சரவணபெல்கோலா.

இத்தலம் சமணர்களால் மிகப் புனிதமாகக் கருதப்படுகின்றது. இங்குள்ள சிறு குன்றின்மீது கோமடேஸ்வரர் என்னும் சமண தீர்த்தங்கர்கள் இருபத்து நால்வரில் ஒருவரின் திருவுருவம் 58 அடி உயரத்திற்கு நிர்வாணமாக நிற்கின்றது. மலையடிவாரத்தே அழகிய பெரிய திருக்குளம் உள்ளது. இதில் நீராடி, வழிபாட்டையும் காலை உணவையும் முடித்துக்கொண்டு மலைமீதேறி இப்பிரம்மாண்டமான மூர்த்தியைப் பார்த்துவிட்டுக் கீழிறங்கினோம்.

அடிவாரத்திலும் ஒரு சமணதீர்த்தங்கரின் கோயிலுள்ளது. இக்கோயிலும், மலைக்கோயிலும் திகம்பர சமணரைச் சேர்ந்தது. எல்லாச் சிற்பங்களும் நிர்வாணமாயுள்ளன. இது திகம்பர சமணர்களின் முக்கியமான தலம். நாங்கள் சென்றிருந்த போது ராசபுதனத்திலிருந்து ஒரு அன்பர் இங்கு யாத்திரை வந்திருந்தார். 12 ஆண்டுகளுக்கொரு முறை, இந்த மூர்த்திக்குச் சிறப்பான திருமுழுக்கு வழிபாடுகள் செய்கின்றனர். அதுசமயம் நமது நாட்டின் பல பாகங்களிலிருந்தும் நூற்றுக் கணக்கான சமணர்கள் இங்குவந்து கூடுகின்றனர்.

நண்பகல் உணவிற்குப் பிறகு மாலை புறப்பட்டு இரவு 8-மணி சுமாருக்கு மைசூர் வந்து சேர்ந்தோம். இங்கு வாணிய வைசிய இளைஞர்களால் நடத்தப்படும் சண்முக நூல்நிலையத்தில் தங்கினோம். இச்சமூகத்தார்கள் சுமார் 200 குடும்பத்தினர் இங்குள்ளனர். இவர்கள் யாவரும் ஈரோட்டிலிருந்து வந்து இங்கு குடியேறினவர்கள். இவர்கள் சிறு வியாபாரங்களிலும், பல சிறு தொழில்களிலும் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையத்தில் தொடர்புடைய, காத்தான் செட்டியார், சாந்தாமணி செட்டியார் ஆகிய இருவரும் எனது நெருகிய நண்பர்கள். திரு. காத்தான் செட்டியார் அவர்கள் எனது சிதம்பரம் கால்நடையாத்திரையில் உடன் கலந்து கொண்டவர்கள். இவர்கள் இந்த யாத்திரையில் நாங்கள் மைசூர் வந்ததிலிருந்து ஈரோடு புறப்படும் வரையிலும் எங்களுடனேயே இருந்து எங்களுக்கு வேண்டிய உதவிகள் யாவையும் செய்தார்கள்.

21—2—57 வியாழக்கிழமை. மைசூர்.

இன்று அதிகாலை புகைவண்டி மூலம் சிரங்கப்பட்டணம் சென்றோம். காவிரியாறு மூன்று இடங்களில் பிரிந்து மீண்டும் கூடுகின்றது. இவற்றிற்கு வடமொழியில் ரங்கம் என்று கூறுவர். முதலிரண்டும் மைசூர் நாட்டிலும், மூன்றாவது ரங்கம் தமிழ் நாட்டில் திருச்சிக்கு அருகிலும் உள்ள திருவரங்கமும் ஆகும். இதுபோன்று நதி இடைப்பட்ட பூமிக்கு தமிழில் துருத்தி என்று கூறுவர்.

முதன் முதலில் காவிரி இடைத்தோன்றிய இந்த ரங்கத்தை ஆதிரங்கம் என்றும், சிவசமுத்திர அருவிக்கு அண்மையிலுள்ளதை மத்தியரங்கம் என்றும், தமிழ் நாட்டிலுள்ளதை அந்தரங்கம் என்றும் கூறுவர். மூன்று அரங்கங்களிலும் பெருமாள் கோயில் சிறப்புடையது.

இங்கு காவிரியில் நீராடினோம். நதிகள் முழுதும் கற்பாறைகள் நிறைந்துள்ளன. நீராடி ஆன்மார்த்த வழிபாட்டை முடித்துக்கொண்டு ஆதிரங்கப்பெருமானை வழிபட்டோம். கோயில் பெரிது பெருமாள் கிடந்த திருக்கோலத்துடன் திருமஞ்சனத் திருமேனியாக யோகக் காட்சி அருளுகின்றார். இங்கு மற்ற இடத்திலுள்ளது போல் திருமகளும், நிலமகளுமின்றி காலடியில் காவிரியம்மன் மட்டும் வீற்றிருக்கின்றார். ஆதிரங்கப்பெருமானை வழிபட்ட பின்னர், அண்மையிலுள்ள சிவாலயத்தில் வழிபாட்டை முடித்து, சிற்றுண்டி அருந்திய பின்னர் சரித்திரச் சின்னங்களை பார்க்கப் புறப்பட்டோம் இச்சிரங்கப் பட்டிணம் ஹைதர், திப்பு ஆகிய இரு முகமதிய மன்னர்கள் தலைநக ராகக்கொண்டு ஆண்ட இடம்.

திப்புவின் அரண்மனை.

இது ஒரு நந்தவனத்தினிடையே அழகாக உள்ளது. சுவர்களி லெல்லாம் சரித்திர வரலாறுகள் சித்திரங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. இங்கிருந்து 2 மைல் தூரத்திலுள்ள திப்பு சமாதியைப் பார்க்கச் சென்றோம். இச்சமாதி பெரிய கட்டிடம். பெரிய விமானம் இருக்கின்றது. திப்புசுல்த்தான், அவன் தந்தை ஹைதர்அலி, தாயார் இவர்களின் மூன்று சமாதிகள், வரிசையாக உள்ளன. வெளியில் பலரின் சமாதிகள் காணப்படுகின்றன. இச்சமாதிகளை போகின்றவர்கள் வணங்குகின்

றனர். சமாதி வாயிற் கதவுகள் தந்தத்தினால் வேலைப்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. வேலைபாடுகளுடன் இணைக்கப்பட்ட சலவைக்கல் சாளரங்கள் இச்சமாதி அறைகளை அழகுபடுத்துகின்றன. சமாதிக்கருகில் ஒரு தொழுகை இடம் உளது. இவற்றையெல்லாம் பார்த்து விட்டு நண்பகல் உணவை அருந்திவிட்டு மாலை மைசூர் வந்து சேர்ந்தோம்.

22—2—57 வெள்ளிக்கிழமை.

நஞ்சன்குடி—சாமுண்டீஸ்வரி மலை.

இன்று காலை நஞ்சன்குடி என்னும் ஊருக்கு வந்து காபில நதியில் நீராடி வழிபாட்டை முடித்துக் கொண்டு திருக்கோயிலுக்குச் சென்றோம். கோயில் தமிழ் நாட்டுப் பெரிய கோயிலைப் போன்று பெரிய சிவாலயம்.

இக்கோயிலில் குறிப்பிடத்தக்கவை 63 நாயன்மார்களின் திருவுருவங்கள். மற்றொரு பக்கத்தில் காலா காலர் அர்தநாரி, காமாரி முதலிய 25 சிவமூர்த்தங்களும் ஆகும். மூர்த்தங்கள் யாவும் வெகு அழகான பெரிய மூர்த்திகள். இங்குள்ள அறுபத்திமூவர் போன்ற அழகிய பெரிய திருவுருவங்கள் தமிழ் நாட்டில் எங்கும் காண்பது அரிது. இந்நாயன்மார்களின் பெயர்கள் கன்னட மொழியில் எழுதப் பட்டுள்ளன. அப்பெயர்களைப் பார்க்கும்போது இப்பெயர்கள் தமிழ் மொழியிலுள்ள பெரிய புராணத்தை வட மொழியில் மொழிபெயர்த்தெழுதப்பட்ட உபமந்நிய பக்த விலாசம் என்ற நூலைத் தழுவி பெயர்கள் எழுதப்பட்டுள்ளன. பெயர்கள் யாவும் தமிழிலிருந்து வட மொழியில் மாற்றி அவை கன்னட மொழியில் மாற்றப்பட்டுள்ளன. ஆனாய நாயனாரைக் கோநாதரு என்றும், காரைக்கால் அம்மையாரை பூதவதிபாரு என்றும், ஐபடிகள் காடவர்கோன் நாயனாரை பஞ்சபாத பல்லவரு என்றும் எழுதியுள்ளார்கள். அலங்கார நந்தி என்ற அழகிய பெரிய தனி நந்தி ஒன்று தனியாக உளது. நஞ்சுண்ட நாதனை வழிபட்டு நண்பகல் மைசூர் திரும்பினோம்.

மாலையில் தனி உந்துவண்டி மூலம் சாமுண்டீஸ்வரி மலைக்குப் புறப்பட்டோம். வழியில் புதிதாகக் கட்டப்பட்ட **லலிதா மகால்** என்னும் அரண்மனையைப் பார்த்தோம். அரசர்களின் ஆடம்பர

போக வாழ்க்கையைக் கண்டு வியந்தோம். பிறகு வண்டியின் மூலம் கோவிலை அடைந்தோம். மைசூர் அரசர்களின் குலதெய்வமாகிய சாமுண்டீஸ்வரியை வழிபட்டோம். வேலைபாடுள்ள வெள்ளிக்கதவுகள் பொறுத்தப்பட்டுள்ளன. வழியில் மகிஷாசூரனின் பெரிய திருவுருவைப் பார்த்தோம். இவன் பெயராலேயே மகிஷனூர்—மைசூர் என ஆயிற்று என்பர். தேவர்களின் வேண்டுதலின்படி 10 நாட்கள் போரிட்டு அம்மை இவனைக்கொன்றார். அந்த 10 நாட்களே தசரா என்று இந்நகரில் அரச குடும்பத்தினர்களால், சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. அதுசமயம் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான மக்கள் வந்து இந்நகரில், விழாவைக்காணக் கூடுவார்கள்.

இங்கு மலைமீது அரசர் வந்தால் தங்க ஒரு அரண்மனை உள்ளது. திரும்பி இறங்கி வரும்போது மலையின் நடுவழியில் பிரமாண்டமான பெரிய அழகிய நந்தி உள்ளது. இதனையும் கண்டு மகிழ்ந்து இருப்பிடம் வந்து சேர்ந்தோம். மலைமீதுள்ள கோயிலை அடைய, உந்து வண்டி மூலம் செல்வதற்குரிய, நீண்ட பாதையும், காலால் ஏறிச்செல்வதற்குரிய படிக்கட்டுகளால் அமைக்கப்பட்ட குறுக்கு வழியும் உள்ளன. நடந்து செல்லும் வழியில், மத்திய வழியில் நந்தி உள்ளது.

23—2—57 சனிக்கிழமை.
ஜகன்மோகன் பேலஸ்.

இன்று அதிகாலை நீராடி, பின்னற் நிமலனை வழிபட்ட பிறகு, ஜகன் மோகன் அரண்மனையைப் பார்க்கச் சென்றோம். இந்த அரண்மனை பலவிதமான படங்கள் சிற்பங்கள், வரலாற்றுப் படங்கள், பொருள்கள் நிறைந்த ஒரு கண்காட்சிக் கூடமாய் விளங்குகின்றது.

இப்படங்களில் ஒன்று ஒரு இளம் நங்கை கையில் ஒரு குத்து விளக்கை எடுத்துக்கொண்டு மறு கையால் விளக்கை அணையாவண்ணம் தடுத்துக் கொண்டு செல்லும் வர்ணப்படம், யாவருள்ளத்தையும் கவர்ந்தது. விளக்கின் சுடர் அப்பெண்ணின் முகத்தில் வீசுகின்றதை வர்ணத்தில் தீட்டிக் காண்பித்துள்ளான். திடீரென்று பார்க்கும் போது கையின் மறைப்பில் விளக்கு எரிவது போன்றே தெரிகின்றது! இவைகளைப் பார்த்து விட்டு காலை 10 மணிக்கு நகரப் பொது வெளியிடத்திற்கு வந்தோம்.

நமது நாட்டின் தவப்புதல்வராகிய முடி சூடா மன்னர் நேரு அவர்களை நோக்கி பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமி இருந்தனர். குறித்த நேரத்தில் நேரு அவர்கள் தேர்தல் சொற்பொழிவை முன்னிட்டு வந்து சேர்ந்தார். மக்கள் ஆரவாரம் கடல் அலைபோல் பொங்கிற்று.

நேரு அவர்கள் காஷ்மீர் நிலையையும், உலக அரசியல் தலைவர்களின் சூழ்ச்சியையும், நம்முடைய நாட்டில் சேவையின் அவசியத்தையும் விளக்கி 1 மணி நேரம் பேசிவிட்டு, உடனே பெங்களூர் சென்றார்கள். நாங்கள் உணவு ஓய்வு எடுத்துக்கொண்டு மாலை 4 மணிக்கு தனி உந்துவண்டி அமர்த்திக்கொண்டு, கிருஷ்ணராஜசாகர் என்னும் கண்ணம்பாடி அணையைக் காணச்சென்றோம்.

கண்ணம்பாடி அணை.

அணை $1\frac{1}{2}$ மைல் நீளமுள்ளது. அங்கு அணையின்கீழ் பிருந்தாவனம் என்னும் பூங்கா கண்டுகளித்தற்குரியது. இங்கு தண்ணீரில் பலவிதமான வர்ண விளக்குகளைப் பொறுத்தி, மாய சாலங்கள் செய்திருக்கின்றார்கள். ஒவ்வொரு செடிகள் தோறும் பல விளக்குகளை அமைத்து இருக்கின்றனர். பல்லாயிரக்கணக்கான பலநிற மின் விளக்குகள் எரியும் காட்சி; இது என்ன கந்தர்வலோகமோ என்று எண்ணி, வியக்கத்தக்க நிலையில் உள்ளது. யாவற்றையும் கண்டு களித்து இரவு மைசூர் வந்து எங்கள் தங்கு இடம் சேர்ந்தோம்.

24—2—57 ஞாயிறு. அரசர்வாழ் அரண்மனை.

இன்று காலையில் வழிபாட்டை முடித்துக்கொண்டு தற்போது அரசர் வாழ்ந்து வரும் அரண்மனையைக்காண அநுமதிச்சீட்டு பெற்றுக்கொண்டு அரண்மனை உள் சென்றோம். கோட்டை மதிற்சுவற்றைத் தாண்டினால் விசாலமான மைதானத்தின் மத்தியில் அரண்மனை கெம்பீரமாய் விளங்குகின்றது. கோட்டைச் சுவற்றை அடுத்து சிவாலயம், திருமால் ஆலயம், சக்தியின் ஆலயம் முதலிய பல ஆலயங்கள் இருக்கின்றன. இவற்றுள் சமீபத்தில் அரசரால் கட்டப்பட்டது சாவித்திரி, காயத்திரி, சரஸ்வதி என்னும் முச்சக்திகளுடைய கோயிலில் மூர்த்திகள் வெகு அழகாயுள்ளன.

கோட்டையின் நடுமையத்தில் அரண்மனை அழகாக விளங்கு கின்றது. கொலுமண்டபம் தங்க வர்ணத்தால் அழகு செய்யப் பட்டுள்ளது. இம்மண்டபத்தில் ரவிவர்மாவால் தீட்டப்பட்ட பெரிய பெரிய இராமாயண, பாரதங்களின் முக்கிய கட்டங்கள் சித்தரிக்கப் பட்டுள்ளன. ஒரு படத்தைப் பார்த்தால் அதையே பார்த்துக் கொண் டிருக்கலாம் போன்றிருக்கின்றது.


மைசூர் அரசர்கள் பாண்டியர்களை ஈரோடு கோட்டையில் சண்டை யிட்டுத் தோற்கடித்துள்ளார்கள். இந்த வரலாறு சிரங்கபட்டணம் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. அதன் அடையாளமாக பாண் டியர்களின் மீன் சின்னத்தைத் தங்கள் விருதுகளில் ஒன்முக வைத் துள்ளார்கள். அரண்மனையைச் சுற்றிப்பார்த்த பிறகு இருப்பிடம் வந்தோம். வணிக வைசிய மக்கள் எங்கள் திருக்கூட்டத்திற்கு மகேஸ் வரர் வழிபாடு செய்தனர். இவை முடிந்த பிறகு மாலை மிருகக் கண் காட்சியைப்பார்க்கச்சென்ளேம். சென்னை, திருவனந்தபுரம், கல்கத்தா முதலிய பெரிய நகரங்களிலிருப்பது போல் இதுவும் ஒரு பெரிய கண்காட்சி சாலை. அரிதில் காணக்கூடியதாகிய காண்டா மிருகம், ஒட்டகச் சிவிங்கி, நீர்யானை முதலிய மிருகங்கள் உள்ளன. இரவு 7-மணிக்கு இருப்பிடம் வந்தோம். சண்முகம் நூல் நிலையம் செயலாளர் வெங்கடாசலம் அவர்கள் உற்சாகமுள்ள நல்ல இளைஞர். அவர் ஒரு சமயச் சொற்பொழிவிற்கு ஏற்பாடு செய்திருந்தார். காரைக்கால் அம்மையாரின் வரலாற்றை 2-மணி நேரம் பேசினேன். யாவரும் கேட்டுப் பெருமகிழ் வெய்தினர். இரவு யாவரும் கண் அயர்ந்தோம்.

25—2—57 திங்கள். சிவசமுத்திரம்.


இன்று அதிகாலை எழுந்து வழிபாட்டை முடித்துக்கொண்டு தனி உந்துவண்டி அமைத்துக் கொண்டு சிவ சமுத்திரம் என்ற இடத்தில் காவிரியின் நீர்வீழ்ச்சியைக் காணச் சென்ளேம். இந்த இடத்தில் காவிரி மீண்டும் இரண்டாவதாக பிரிந்து ஒரு தீவை உண்டாக்கி 300 அடிப்பள்ளத்தில் பெரிய அருவியாக விழுகின்றது.

இந்தத்தீவில் தான் மத்தியரங்கம் என்னும் புண்ணியத்தலம் அமைந்துள்ளது. இங்கு ஒரு சிவாலயமும் உள்ளது. இந்த இரண்டு கோயில்களின் உள்த்துறை, புறத்துறை சிப்பந்திகளின் வீடுகள்தான் இத்தீவில் இருக்கின்றன. இரண்டு கோயில்களும் நல்ல நிலையில் உள்ளன. இத்தீவிற்குச் செல்ல பாலம் ஒன்று இருந்து வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளது. பாலம் கட்ட புது முயற்சி ஒன்று செய்யப்பட்டும், கைவிடப்பட்டுள்ளது. ஆற்றிலிறங்கி கற்பாறைகளைத் தாண்டி கோயிலை அடைந்தோம். மூர்த்தி ஆதிரங்கமாகிய ஸ்ரீரங்கப் பட்டணத்திலுள்ள மாதிரியாகவே அமைந்துள்ளது ஆனால் கோயில் ஆதிரங்கத்தைவிடச் சற்று சிறியது. மத்தியரங்கப் பெருமாளையும், முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளாகிய சிவபெருமானையும் வழிபட்டு சிவசமுத்திர நீர்வீழ்ச்சியை காணச்சென்றோம். மத்தியரங்கக் கோயிலுக்கருகில் நதியின் மத்தியில் சிறு அணை கட்டி காலவாயாக நீரைப்பிரித்து மின்சாரம் எடுக்கக்கொண்டு செல்கின்றனர்.

சிவ சமுத்திரம் என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தோம். நண்பகல் 2-மணி இருக்கும். 46 பேருக்கும் திடீரென்று உணவுச்சாலையில் உணவு எங்கு கிடைக்கும்? ஆகையால் உணவு தயார் செய்து கொடுக்கச் சொல்லி விட்டு மற்றவற்றை காணச்சென்றோம். காவிரி இந்த இடத்தில் பல அருவிகளாக சுமார் 300 அடி பள்ளத்தில் விழுந்து மீண்டும் ஒன்று சேர்ந்து ஓடுகின்றது. இந்த இடம் ஜோக் அருவி வீழும் காட்சி போல் அவ்வளவு அழகான காட்சி அன்று. இங்கு காடுவளம் குறைவு. இங்கு காவிரியின் சிவ சமுத்திர நீர் வீழ்ச்சியைப் பார்த்துவிட்டு, மின்சார உற்பத்தி நிலையத்தைக் காணச்சென்றோம். அந்நிலையம் சுமார் 300 அடி பள்ளத்தில் இருக்கின்றது. அங்கு செல்ல, இரும்பு வடக் கயிற்றில் பிணைக்கப்பட்ட ஆசனத்தில் அமர்ந்து சென்றோம். கீழ் தலத்திற்கு நேர் செங்குத்தாகச் செல்கின்றது. மின்சார உற்பத்தி நிலையத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு மீண்டும் மேலே வந்து, உணவுச் சாலையில் உணவருந்தி விட்டு, மைசூர் திரும்பி வந்து இருப்பிடம் சேர்ந்தோம்.



சமணத்தீர்த்தங்கர்.
சரவணபெல்கோலா (மைசூர்)



ஜோக் நீர்வீழ்ச்சி.

26—2—57 செவ்வாய். ஈரோடு திரும்புதல்.

மறுநாள் புதன்கிழமை சிவராத்திரி. சிவராத்திரிக்கு ஈரோடு வந்து, ஈரோடை அப்பருக்குத் திருத்தொண்டு செய்வதென்று திட்டமிட்டிருந்தபடியால், இன்று விடியற்காலை 4-மணிக்கே நீராடி வழிபாட்டை முடித்துக்கொண்டு 6-மணி புகைவண்டித்தொடரில் மைசூர் சந்திப்பிலிருந்து சாமராச நகருக்குப் புறப்பட்டோம். அன்பர் கனம் காத்தான் செட்டியார் அவர்கள் நாங்கள் மைசூரிலிருந்த நாட்களெல்லாம் உடனிருந்து எங்களுக்கு வேண்டுவன செய்து ஈரோட்டிற்கு எங்களை வண்டியேற்றி அனுப்பிவிட்டுச் சென்றார். அவருடைய நன்றி மறவா நற்குணம் போற்றுதற்கு உரியது. நகர புகைவண்டி நிலையத்தில் வண்டி நின்றதும் செயலாளர் திரு. வெங்கடாசலம் அவர்களும், திரு. சாந்தாமணி செட்டியாரும் வந்து அன்புடன் வழியனுப்பிக் கொடுத்தனர். புகைவண்டித் தொடர் காலை 9½-மணி சுமாருக்கு சாமராச நகரம் வந்து சேர்ந்தது. இங்கிருந்து உந்து வண்டியில் பயணம் தொடங்க வேண்டும். மலைமேல் செல்ல வேண்டி இருப்பதால் சிறிய வண்டிகள். வண்டிக்கு இடம் கிடைப்பது அருமையாக இருக்கின்றது

ஆனால் நாங்கள் முன் எச்சரிக்கையாக என்னுடைய முன்னாள் மாணவனாகிய மாரியப்பனை அனுப்பி வண்டியில் சத்தியமங்கலம் செல்ல அநுமதிச்சீட்டு பெறும்படி செய்திருந்தோம். அன்பன் மாரியப்பனும் எங்கள் திருக்கூட்டம் இரண்டு வண்டிகளில் சத்தியமங்கலம் செல்ல ஏற்பாடு செய்திருந்தார். முதல் வண்டி சாமராச நகரிலிருந்து 11-மணி சுமாருக்குப் புறப்பட்டது. இவர்கள் மாலை 4-மணிக்கெல்லாம் ஈரோடு வந்துவிட்டார்கள்.

நாங்கள் வந்த இரண்டாவது வண்டி 12-மணிக்குப் புறப்பட்டது. நாங்கள் நண்பகல் உணவு, 11-மணிக்கே சாமராச நகரில் அருந்திவிட்டுப் புறப்பட்டோம். தமிழ் நாட்டையும் மைசூர் நாட்டையும் மேற்குத் தொடர்ச்சி மலை குறுக்கே தடுத்து நிற்கின்றது. இம்மலை மீது அடர்ந்த காடுகளிடையே பாதை வளைந்து வளைந்து வருகின்றது.

நடு மலையில் மைசூர் நாட்டின் எல்லையும் தமிழ் நாட்டின் எல்லையும் சந்திக்கின்றது. இந்த இடத்தில் சாமராஜ நகரிலிருந்து வந்த வண்டிக்காரன் நின்று கொள்கிறான். இங்கொரு சிறிய சிற்றுண்டிக்கடை உள்ளது. முறுக்கை இங்கு தக்ளி என்று கன்னடத்தில் கூறுகின்றனர் கன்னட தக்ளிகள், மிகச் சுவை உடையதாயிருந்தன. சிறிது நேரத்தில் கடையிலுள்ள சாமான்கள் யாவும் காலியாகி விட்டன.

இதற்குள் சத்தியமங்கலத்திலிருந்து வண்டி வந்து சேர்ந்தது வந்த வண்டியிலுள்ள மக்களை ஏற்றிக்கொண்டு, எங்களை வந்த வண்டியில் மாற்றிக்கொடுத்தார்கள். வண்டி மீண்டும் வளைந்து வளைந்து பல மலைத்தொடர்களைத் தாண்டி இறங்கி மாலை 4-மணி சுமாருக்கு சத்திய மங்கலம் வந்து சேர்ந்தது. வழியில் பன்னாரி அம்மனை வழிபட்டோம். சத்தியிலிருந்து மாலை 5-மணிக்குப் புறப்பட்டு கோபிசெட்டிபாளையத்தின் வழியாக சுமார் இரவு 7½-மணிக்கு ஈரோடு வந்து சேர்ந்தோம்.

சாமராச நகரிலிருந்து சத்தியமங்கலம் வரும் மலைப்பாதை நல்ல நிலையிலில்லை. வெறும் கப்பிப்பாதை. இதைத் தார் போட்ட பாதை ஆக்கின் நலம். நீண்ட நாளாக இரு அரசாங்கத்தின் திட்டத்திலிருந்து வரும்படியான, அதாவது சாமராச நகரத்திலிருந்து புகைவண்டிப் பாதையை சத்தியமங்கலம் வழியாக ஈரோடு சந்திப்பிலோ, அல்லது கோயமுத்தூர் சந்திப்பிலோ சேர்ப்பது மிகப் பயனுடையது, விரைவில் செய்ய வேண்டிய அவசியமான வேலையுமாகும் இவ்வாறாக எங்கள் கோகரணத் திருப்பயணம் நல்ல முறையில் வெற்றியுடன் இறைவன் அருளால் நிறைவேறிற்று.

கோகரண நாதன் குரைகழல் வாழ்க.

திருச்சிற்றம்பலம்

திருக்கோகரணத்திற்குச் செல்லும் வழிகள் :—

(1) மங்களூர், உடுப்பி, பைந்தூர், கும்டா இந்த வழியாகச் செல்லுகின்றவர்கள் மங்களூர் வரையிலும் புகை வண்டித் தொடரில் சென்று, அங்கிருந்து உந்து வண்டி (பஸ்) மூலம் செல்லுதல் வேண்டும். வழியில் 7 நதிகளைக் கடக்கவேண்டும்.

(2) மைசூர் அல்லது பெங்களூர் வழியாக பீரூர் சந்திப்பை அடைந்து வண்டி மாறி தாலக்குப்பா செல்லும் கிளை வழியில் சாகர் வரையிலும் புகை வண்டியில் சென்று அங்கிருந்து சிர்சி வழியாக கோகரணம், உந்து வண்டியில் போகலாம். தனி உந்து வண்டி வைத்துக்கொண்டும் இந்த வழியாகச் செல்லலாம். நதிகளை கடக்க வேண்டிய சிரமம் குறைவு.

இந்த வழியில் இரு நதிகளை உந்து வண்டியையும் நம்மையும் படகில் உடன் ஏற்றி நதியைக் கடத்தி விடுகின்றார்கள்.

(3) புகை வண்டித்தொடர் மூலம் ஹூப்ளியடைந்து அங்கிருந்து உந்து வண்டி மூலம் கோகரணம் அடையலாம். ஆனால் இது சற்று அதிக தூரம். பம்பாயிலிருந்து வருகின்றவர்களுக்கு இது பக்கம். ஹூப்ளியிலிருந்து கோகரணம் 82 மைல்.

திருப்பயணத்தில் பங்கு கொண்ட அன்பர்கள் மொத்தம் 46 பேர்கள்.

ஆண்கள்.

1	திருவாளர்	சு. இராமசாமி செட்டியார்
2	,,	வை. பழனியப்ப செட்டியார்
3	,,	ரா. ப தங்கவேலு
4	,,	M. கணபதி முதலியார்
5	,,	கு. சி. கந்தசாமி முதலியார்
6	,,	சி. அங்கமுத்து முதலியார்
7	,,	S. S. பொன்னுசாமி முதலியார்
8	,,	M. S. மாரிமுத்து முதலியார்
9	,,	R. M. இராமசாமி
10	,,	C. சாமியப்பன்
11	,,	D. நாராயணசாமி
12	,,	ரா. நாச்சிமுத்து முதலியார்
13	,,	S. இராமசாமி
14	,,	M. S. முத்துக்கருப்பன் செட்டியார்
15	,,	அ. மு. நாச்சிமுத்து முதலியார்
16	சாய்க்காடு திரு.	S. நல்லய கவுண்டர்
17	திருப்பூர் ,,	சாமிநாத முதலியார்
18	ஈரோடு ,,	சுந்தரம்

பெண்கள்.

1 திருமதி. பருவதத்தம்மாள்
2 „ M. குழந்தையம்மாள்
3 „ கா. உருக்குமணியம்மாள்
4 „ அம்மாக்கண்ணம்மாள்
5 „ க. சுந்தராயம்மாள்
6 „ மு. மாரியம்மாள்
7 „ ஆ. நஞ்சம்மாள்
8 „ வள்ளிநாயகி
9 „ வள்ளியாத்தாள்
10 „ பாலங்கியம்மாள்
11 „ நா. அங்காயம்மாள்
12 „ அ. மு. நாச்சம்மாள்
13 „ ரா. அருக்காணியம்மாள்
14 „ மு. மீனாக்ஷியம்மாள்
15 „ தங்கம்மாள்
16 „ இசக்கியம்மாள்
17 „ சுப்பம்மாள்
18 „ பாப்பம்மாள்
19 „ மீனாக்ஷியம்மாள்
20 „ வீ. குப்பாயம்மாள்
21 „ வள்ளியம்மாள்
22 சித்தோடு திருமதி. இலக்ஷிமியம்மாள்
23 திருப்பூர் „ இலக்ஷிமியம்மாள்
24 „ „ வெங்கிட்டம்மாள்
25 „ „ தாயம்மாள்
26 „ „ கமலம்மாள்
27 „ „ சாமியாரம்மாள்

திருச்சிற்றம்பலம்.

திருக்கோகரண திருப்பயணத்தில் பயணம் சென்ற ஊர்களின் தூரமும், வண்டிச் சத்தமும்.

ஈரோடு to மங்களூர்	315 மைல்	வ. சத்தம்	9—6—0
மங்களூர் to உடுப்பி	57 ,,	,,	2—3—0
உடுப்பி to கொல்லூர்	58 ,,	,,	2—4—0
கொல்லூர் to பைந்தூர்	16 ,,	,,	0—11-3
பைந்தூர் to சிரூர்கடி	7 ,,	,,	0—5—0
சிரூர்கடி to காசர்கோடு நதிக்கரை	28 ,,	,,	1—5—0
ஒன்னவர் to கும்டா	12 ,,	,,	0—9—0
கும்டா to கோகரணம்	18 ,,	,,	0-13—6
கோகரணம் to கும்டா வழி சிர்சி	56 ,,	,,	2-10—0
சிர்சி to ஜோக் நீர்வீழ்ச்சி	36 ,,	,,	1-11—0
ஜோக் நீர்வீழ்ச்சி to சாகர்	21 ,,	,,	1—1—0
சாகர் to ஹாசன்	148 ,,	,,	4—5—0
ஹாசன் to பேலூர்	22 ,,	,,	1—0—0
பேலூர் to காலிபைடு	11 ,,	,,	0—8—0
காலிபைடு to சரவணபெல்கோலா	59 ,,	,,	2-12—0
சரவணபெல்கோலா to மைசூர்	51 ,,	,,	1—8—0
மைசூர் to சிரங்கபட்டணம்	9 ,,	,,	0—5—0
சிரங்கபட்டணம் to மைசூர்	9 ,,	,,	0—4—0
மைசூர் to நஞ்சன்கூடு	16 ,,	,,	0—8—0
நஞ்சன்கூடு to மைசூர்	16 ,,	,,	0—8—0
மைசூர் to சாமுண்டிமலை போகவர	14 ,,	,,	1—0—0
மைசூர் to சோமநாதப்பூர், சிவ சமுத்திரம் போக வர	96 ,,	,,	4—0—0
மைசூர் to கண்ணம்பாடி அணை போக வர	18 மைல்.		1—0—0
மைசூர் to சாமராச நகர்	38 ,,	,,	1—0—0
சாமராச நகர் to சத்தி	48 ,,	,,	2-11—6
சத்தி to ஈரோடு	38 ,,	,,	1-10—0
மொத்த ஊர்கள் 20	1217 மைல்கள்		ரூ. 45-14—3

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஈரோடு அருள்நெறித் திருக்கூட்ட வெளியீடுகள்—11.

---

1. அருட்சுடர் வள்ளலார் (அச்சில்)
2. திருக்கோயில் வழிபாடு
3. திருக்கோயில் தமிழ் மறை வழிபாடு (அச்சில்)
4. திருக்கருவூர் தல வரலாறும், திருப்பாடற் கருத்துக்களும்.
5. திருக்கொடிமாடச் செங்குன்றூர் பதிவரலாறும், பாடற கருத்துக்களும்.
6. கொங்கு நாடும், சுந்தரரும்.
7. திருப்பாண்டிக் கொடுமுடி பதிப்பெருமை.
8. ஈரோடை தலப்பதிகம்
9. தமிழ் திருமண நூல்
10. புனிதவதியார்
11. திருக்கோகரணம் திருப்பயண மலர்.

ஓர் வேண்டுகோள்.

அப்பர், சம்பந்தர் பாடிய கோகரணப் பதிகங்களைப் பளிங்குக் கல்லில் வெட்டுவித்து, இந்த அரிய தலத்தில் நிறுவுவது ஒப்பற்ற சிவபுண்ணியமாகும்.

மடாதிபதிகளும், செல்வந்தர்களும் இதை கவனிப்பார்களாக.